

# ஞானச்சுடர்

ஆடி மலர்

2009



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா விடை**

பொருள்: தருமத்தின் பயன் இத்தன்மையதென்று நூற் பிரமாணங் கொண்டு காட்டவேண்டியதில்லை : பல்லக்குச் சுமப்போனுக்கும் அதில் ஏறிச் செல்வோனுக்குமுள்ள வேற்றுமையே அதனைக் காட்டிவிடும். (37)

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்.**

பொருள்: ஒவ்வொருநாளும் ஒருவன் தருமத்தைச் செய்வானாயின் அது அவன் பிறப்பினின்றும் தப்புவதற்கு வழியாகும். (38)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருத்தாண்டகம் – 1

தேனுந்து முக்கனித்தீஞ் சுவையர் போலும்
சிவகாமி யம்மையிடப் பாகர் போலும்
வானுந் திசையெட்டு மானார் போலும்
மறிகடலு மதிகதிரு மானார் போலும்
தானும்நானு மொன்றா யிருப்பார் போலும்
சாதலொடு பிறத்தலுந் தவிர்ந்தார் போலும்
மானும் மழுவுந் தரித்தார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றாரே 1

ஆயிரந் திருநாம முடையார் போலும்
அஞ்செழுத்து மெட்டெழுத்து மானார் போலும்
தீயினும் மேனி சிறந்தார் போலும்
சென்னிமிசைக் கங்கையினைச் செறித்தார் போலும்
தாயினும் நனிமிக்க வினியார் போலும்
சாமகா னப்பிரிய முடையார் போலும்
நாயினுங் கடையேனை யாண்டார் போலும்
நன்மையொடு தீமையொன்று மில்லார் தாமே 2

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 139

## 2009 ஆடி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| ஒன்றுதான் | முருகவே பரமநாதன் | 1 - 4 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய... | | 5 |
| ராம பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 6 - 8 |
| அம்மாவிற்குரிய பெருமை... | கு.குணாளன் | 9 - 11 |
| தவமுனிவனின்... | சிவ. மகாலிங்கம் | 12 - 16 |
| கொன்றை வேந்தன் | ஔவையார் | 17 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 18 - 20 |
| ஆசாரக் கோவை | | 21 - 22 |
| வட இந்திய ஸ்தல.... | | 23 - 25 |
| சங்கற்பம் செய்தல் | தி. பொன்னம்பலவாணர் | 26 - 27 |
| நித்திய அன்னப்பணி | | 28 - 29 |
| அமைதிக்கு வழி | செல்வி அ. கந்தையா | 30 - 32 |
| அருணகிரிநாத சுவாமி விழா | | 33 |
| திருவிளையாடற்புராண... | ஆறுமுகநாவலர் | 34 - 35 |
| வினை | வாரியார் சுவாமிகள் | 36 - 38 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி... | செல்வி தி.வரதவாணி | 39 - 41 |
| செய்திச் சிதறல்கள் | | 42 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 43 - 46 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 47 - 50 |



**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**பதிவு இல. Q.D/38/NEWS/2009**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

உ

# ஞானச்சுடர்

# ஆனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை சந்நிதியான் மீது அதீத பக்தி கொணடவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு கொள்பவரும் கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபருமான திரு. ச. லலீசன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் ஒரு இதழை வெளியிடுவது என்பது சிரமமான காரியமாக இருக்கின்றது. ஆனால் காலம் தப்பாமல் கடைசி வெள்ளிக்கிழமை ஒவ்வொரு மாதமும் ஞானச்சுடர் மலரை வெளியிடுவது என்பது மிகப்பெரிய சவால் என்றும் பல மலர்கள் வெளிவரத் தொடங்கி இடையில் நின்றுவிடுவது சகஜம். ஏனெனில் கட்டுரைகள் இல்லாததுதான் காரணம். ஆனால் சைவ அபிமானிகள் இம்மலரை வளர்க்க வேண்டுமென்று துடிக்கிறார்கள் என்றும் கூறினார். மேலும் இம்மலரானது அறிவுப் பொக்கிஷமாக வீட்டு வாசலுக்கு வரும்போது சந்நிதியானே நேரில் வந்து கதவைத்தட்டுவது போன்ற அனுபவம் ஏற்படுவதாகவும், முருகனை உள்ளார்ந்த பக்தி கொண்டு மனத்தால் வைதால் கூட எம்மை வாழவைக்கும் பெருமை பொருந்தியவன் என வியந்து கூறித் தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

138 ஆவது மலருக்கான மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய ஆசிரியரான திரு. க. நவரத்தினம் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது மதிப்பீட்டுரையின் ஆரம்பத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் இம்மலரை நான் மதிப்பீடு செய்வதென்பது முடியாத காரியம். இதற்கு முருகனின் அருள் வேண்டும் என்றும் மலரிலே இடம்பெறும் ஆக்கங்கள் பெரும்பாலும் ஆப்த வாக்கியத்தின் தளத்திலே காட்டப்பட்ட காவிய மாளிகைகள் இவற்றை ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்க முடியாது.

நாம் செய்யக் கூடியன எல்லாம் இவற்றை எளிமைப்படுத்தி இச்சிந்தனைகளை தரிசிக்கக் கூடிய மனப்பக்குவத்தை உருவாக்க முயற்சிப்பது மட்டுமே. ஞானச்சுடர் மலரின்மூலம் இருளும் மருளும் நீங்கி தெருளும் அருளும் பெற அவன்தாள் பணிவோம். அவனருளாலே அவன் தரிசனத்தில் அத்வைத நிலை காண்போம். திருவருள் கூடி நிற்கும் ஞானச்சுடர் என்ற இந்த ஒளி வெள்ளம் மானச யாகத்தின் வெளிப்பாடு, சூரிய ஒளியிலே அரும்பு மொட்டாகி மலராகிறது ஞான ஒளியிலே விலங்குணர்வு நீங்கி மானிட உணர்வு பெருக, தெய்வீக உணர்வு கைவரப் பெறுவோம் என்று கூறித் தனது உரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

இவ்வுலகில் மனிதர்கள் யாவரும் தமக்கும் தமது வருங்காலச் சந்ததியினருக்கும் வேண்டுமெனத் தேடிவைப்பது செல்வங்களே. இச்செல்வங்கள் என நாம் அனைவரும் நினைப்பது வீடு, பணம், மனைவி, மக்கள், நிலபுலம், ஆடை, ஆபரணங்கள் முதலியனவையாகத் தான் இருப்பது இயல்பு. நாம் மரணமடைந்ததும் இந்த உடம்பை விட்டு உயிரானது புறப்படும்போது மேற்கூறிய செல்வங்களானது உடன் வரமாட்டாது என்பது கண்கூடு. எல்லோருமே இதனை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இந்தக் கருத்துக்கு எந்தவித மாற்றமோ ஐயப்பாடோ இருக்கவே முடியாது. ஆனால் எம்முடன் கூடவராத இவைகளைத் தான் நாம் தேடுவதிலேயே நம் வாழ்நாள் முழுவதையும் செலவழிப்பது தக்கதன்று. அறிவு என்ற ஒரேயொரு செல்வம் மட்டுமே நாம் எங்கு சென்றாலும் எம்முடன் தொடர்ந்து வரும். ஆகவே மற்றச் செல்வங்களைத் தேடித்திரிவதோடு நின்றுவிடாமல் நாம் அறிவையும் அவசியம் தேடிப்பெற வேண்டும்.

எங்களிடம் அனைத்துச் செல்வங்கள் இருந்தும் அறிவு என்ற செல்வம் இல்லையானால் நாம் அனைவரும் அவதிக்குட்படுவோம் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் நம்மிற் பெரும்பாலானோர் அறிவு என்ற செல்வத்தை மறந்து மற்றைய செல்வங்களையே தேடி ஓடுகின்றனர். அறிவு என்ற செல்வத்தை அடைவதற்கான காரண காரியத்தை அறிந்து முயல்கின்றோமில்லை இதற்கு திருவள்ளுவரும்

**"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்"**

இவ்வாறு விபரிக்கிறார்.

நாம் அறிவு என்ற செல்வத்தை வளர்ப்பதற்கான வழி யாது? என நோக்குவோமானால் சிறந்த அறிவு நூல்களைத் தேடிப் படிக்குந்தோறும் எம்மிடம் உள்ள அறியாமை தேய்ந்து அறிவுச் செல்வம் வளரும். அத்துடன் அறிவு நிறைந்த ஆன்றோர்களுடன் நாள்தோறும், சில நிமிடங்களாவது அளவளாவப் பழகிக் கொள்ள வேண்டும் இதனையே ஒளவையாரும்

**"இனிது இனிது அறிவுள் ளோரைக்**
**கனவிலும் நனவிலும் காண்பது தானே"**

என்று கூறுகிறார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் மற்றைய செல்வங்களோடு அறிவு என்ற உண்மைச் செல்வத்தினை நிரம்ப பெற்றுத் துன்பத்தினின்றும் நீங்கி இன்பமயமாக ஓங்கி உய்வோமாக.

# சந்நிதி சார்ந்து புண்ணியம் பெறுவீர்....

01. அற்புதநல் லாடலினால், அடியவர்கள் மனம் உருக்கும்
பொற்புடைய சந்நிதியான் பொருந்திடு நற்கோயில் சென்று
கற்பகமே, கார்த்திகேயா கந்தா வெனத்துதித்தார்
நற்கருணை மழைபொழிவான் நாடிச் சென்று போற்றுமினே

02 கார்த்திகைமா தர்மடியில் கலந்து தவழ்ந் தாடியவன்
கூர்த்தபிர ணவப் பொருள்தெரியா குல, வயனைக் குட்டியவன்
வேர்த்துக் கொடிய சூரன்தனை வெகுண்டு வேலாற் பிளந்தவனை
மூர்த்தி தலம் தீர்த்த மருள் முருகனைச் சந்நிதி முன்னேத்தீர்

03. கேட்டவரந் தரும் பெரிய கிளர் வடிவேற் சேயோனை
நாட்டினிலே நாடிவரும் நல்லடியார்க் குரியவனை
வாட்ட மெல்லாம் களைபவனை வாழுஞ்சந் நிதியானை
கோட்டமின்றி எங்கிருந்தும் கும்பிடுவீர் பயன் பெறுவீர்

04. ஆவணி மாதஞ் சேரும் அரும் பெரிய சந்நிதியில்
ஏவரும் துதிக்கும் நல்ல இணையில்லா மகோற்சவ நாள்
தேவர்போல் நீரும் நோற்று சிறந்தஅம் முருகவேளை
காவடி விழாக்கள் கண்டு கலந்தருள் பெற்றுய் வீரே

05. முன்னரும் பல்லோ ரிந்த முருகவே ளடிபணிந்து
மன்னர்போல் வளர்ந்து யர்ந்தார் மக்களே கேட்பீரன்றோ
வன்னமா மயிலோன் சேவல் வடிவுடைக் கொடியுளானை
பொன்னனை சென்று ஏத்தின்பொலிவுடன் வாழலாமே

06. அன்னையாம் தேவயானை அரும்பெரும் வள்ளி மானை
தன்னரு கணைத்து வேலைத் தாங்கிய குமரன் தன்னை
அன்னம்பா லித்தருளும் ஐயனைஅன்பா யேற்றிப்
பொன்னடி தொழுவீர்ஏத்தின் புகழுடன் வாழலாமே

07. அருந்தவர் அடியார் சூழ்ந்த அருட் பெருஞ்சந்நிதியில்
பெருந்தவ ஆச்சிரமப் பேறுடைச் சபையார் செய்யும்
அரும்பணி ஒன்றிரண்டோ அறிவுனப் பசியோ பேணைப்
பெரும்பசி தீர்க்கும் அன்னப் பணியிலும் செய்துய்வீரே

முதுபெரும் புலவர்மணி, கலாபூஷணம்
வை.க. சிற்றம்பலவனார்.

உ

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெரு[illegible]

**திரு B. பாலசாந்தன்**
(ஜேர்மனி)

**திரு பொன்னுத்துரை கலைநாதன்**
(வவுனியா)

**திரு Dr. அ. குமாரசாமி**
(பிள்ளையார் கோவிலடி, சித்தங்கேணி)

**திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)

**திரு Dr. பொன். சின்னத்தம்பி**
(திருவேரகம், பொலிகண்டி)

**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**திரு வே. பாராளன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

**திரு S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)

**திரு நா. தங்கராசா**
(இளை. அதிபர், ஈவினை)

**திரு சி. தயாபரன்**
(கிராம சேவகர், கோப்பாய்)

**திரு ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)

**திரு பொன்னையா சிவக்கொழுந்து**
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

**திரு நா. இராசலிங்கம்**
(அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி)

**உரிமையாளர்**
(தனு வீடியோ, உரும்பராய்)

**திரு வ.சி. குணசீலன்**
(தாவரவியல் ஆசிரியர், கரவெட்டி)

**திரு. செ. சுந்தரலிங்கம் J.P.**
(நிர்வாகி - சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலிசந்தி)

**திரு ந. சேகர்**
(கிராமசேவையாளர், வீரபத்திரகோவிலடி, உடுப்பிட்டி)

**திரு. கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

**திரு. சு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**திரு மூ. பஞ்சலிங்கம்**
(நியூ கிளினிக், இணுவில்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**திரு ஸ்ரீ அருள்தாஸ்**
(அருள் ஆபரணமாளிகை, உடுப்பிட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**திரு ம. இரத்தினமூர்த்தி**
(ஜெயகனன் பல்பொருள் வாணிபம், சுண்ணாகம்)
**திரு ந. இராசரத்தினம் J.P**
(நாகம்ஸ் நிறுவனம், சுண்ணாகம்)
**செல்வி. தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**திரு சு. குணரெத்தினம்**
(ஞானவைரவர் வீதி, உரும்பராய்)
**திரு ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**திரு செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்.)
**செயலாளர்**
(கருணையம்பதி சனசமூக நிலையம், கரணவாய்)
**திரு மூ. சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**திரு. க. விகர்ணன்**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**திரு க. சிவகடாட்சம்**
(தாவடி, கொக்குவில்)
**திரு அ. ஸ்ரீதரன்**
(வளர்பிறை பட்டுச்சோலை, சங்கானை)

**செயலாளர்**
(கணபதி படிப்பகம், நெடியகாடு)
**திரு மு. விசயரத்தினம்**
(காட்டுப்புலம், தொண்டைமானாறு)
**திரு R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**திரு S. தர்மலிங்கம்**
(கமலபதி, மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**திரு சி. குகநாதன்**
(புறாடி லேன். அரியாலை)
**திரு வி. சிவபாலசிங்கம்**
(கரன்பான்சி, சுண்ணாகம்)
**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா**
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
**திரு M. பாலசுப்பிரமணியம்**
(ஸ்ரீ முருகன் கபே. ஈவினை)
**திரு க. கிருபானந்தம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திரு M.K. ஜீவகதாஸ்**
(அறவழி, சாவகச்சேரி)
**திரு பா. பத்மராசா**
(மூளாய், சுழிபுரம்)
**திரு செல்வநாயகம் செல்வக்குமரன்**
(சிவன் வீதி, உரும்பராய்)
**திரு மு. இராஜேந்திரன்**
(முருகையா கோவிலடி, புலோலி)
**திருமதி. ஜெயலக்ஷ்மி**
(சென்ற் அந்தோனிஸ் லேன், மாதகல்)
**திரு பொன். சற்குணநாதன்**
(வேம்பன் வீதி, உரும்பராய்)
**திரு சொ. செல்லத்துரை**
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
**திரு நா. தெய்வேந்திரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**திரு வி. தவத்துரைராசா**
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
**திரு சி. கணேசமூர்த்தி**
(அல்வாய்)
**திரு அ. அருள்நாதன்**
(துவாரகா, இணுவில்)

**திரு தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**திரு த. கமலேஸ்வரன்**
(ஈஸ்வரி வாசம், இணுவில்)
**திரு செல்லப்பா சோமசுந்தரம்**
(முன்னாள் வங்கி முகாமையாளர் பகவதி கோயிலடி, உடுப்பிட்டி)
**திரு செ. அருளானந்தம்**
(கிராமசேவகர், பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
**செல்வி தம்பு சறோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
**திரு ச. சூரியப்பெருமாள்**
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
**திரு C.K. சிதம்பரநாதன்**
(வட்டுவத்தை, அல்வாய்)
**திரு நடராசா சிவயோகநாதன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கரவெட்டி)
**திரு க. ஆனந்தராசா**
(லிங்கவாசா, நெல்லியடி)
**திரு க. தங்கராசா T.A.**
(அல்வாய் மேற்கு)
**திரு மா. அருட்செல்வம்**
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
**திரு R. தவகோபால்**
(ஹரிராம், பலாலி வீதி, உரும்பராய்)
**திரு ச. சிவரூபன்**
(சிறுப்பிட்டி)
**திரு ச. சண்முகவடிவேல்**
(ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
**திரு செல்லையா சர்வேஸ்வரன்**
(செல்வளுங்கம், இணுவில்)
**திரு ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**திரு த. கந்தசாமி**
(இருபாலை வீதி, கோண்டாவில்)
**திரு இ. பரமசாமி**
(கொல்லோலை, உடுப்பிட்டி)

உ

# ஒன்றுதான்

**திரு முருகவே பரமநாதன் அவர்கள்**

எது ஒன்று. தெய்வம் ஒன்றுதான். இலக்கம் ஒன்று இரண்டு என வளர்கிறது. ஒன்று ஒருமை. இரண்டு முதலியன பன்மை. பன்மை பல ஒன்றின் கூறுகள் பின்னம், தசமபின்னம் என வரும். தசம் பத்தின் கூறு நூறின் கூறு எனக் கணிக்கப்படும். நாலாகப் பிரித்து ஒரு பங்கு நாலிலொன்று, அல்லது கால். இப்போ ஆங்கில மோடியில் ஒன்றின்கீழ் நாலும், மூன்றின்கீழ் நாலு என்கிறார்கள். சைவர் சுழியமாச்சு. முற்றாத் துறந்த முனிபுங்கவர்களையும், கிறீஸ்தவத் துறவி களையும் பூஜ்ஜியர் என்பர். அப்படியாயின் சுழியத்தோடு இணைத்து எப்படி எழுது வது. நடைமுறைச் சாத்தியம் என்ன? நாம் செய்யும் பாவபுண்ணியங்கள், நன்மை தீமைகளை இறைவன் எழுதி வைப்பான். எனவே மெத்தக்கவனம் என்கிறார் அப்பர். அ∴து அழியா எழுத்து. அழிக்கமுடியா ஓலை.

**தொழுது தூமலர் தூவித் துதித்துநின்**
**றழுது காமுற் றரற்று கின்றாரையும்**
**பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்**
**எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே**

**5:21.8**

திரு இன்னம்பர் ஒரு பாடல்பெற்ற தலம் வீண்பொழுது கழித்து வினை செய்வாரையும் தூமலர் கொண்டு தொழுது அழுவாரையும் இறைவன் ஏட்டில் எழுதி வைப்பான். ஒருநாள் அதற் கான பலன்கிட்டும் தசம் 0000001. குற்றம் செய்யினும் நிட்சயமாய்ப் பதிவு இருக்கும். செய்தபாவம் அத்தனைக்கும் தண்டனை கிடைக்கும்; கோடி அர்ச்சனை செய் தாலும் ஆயிரம் குடம் பால் ஊற்றினாலும் தர்ப்பை போட்டு, உறுமால் அணிந்து தேர் உபயம் செய்தாலும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் இட்டாலும் மன்னிப்புக் கிடையாது. எனவே ஒவ் வொரு கணமும் நாம் நம் நலனிலே அக்கறை கொண்டு நன்றே செய்து நன்றே நினைந்து வாழவேண்டும் என் பதை நம் உள்ளத்தில் எழுதி வைப்போம்.

தெய்வம் ஒன்றேதான். தெய்வந் தொழாஅள் தொழு நற்தொழு தெழுவாள் (குறள் 55) தெய்வத்தான் ஆகா தெனினும் (619) என்பது குறள்வாக்கு. தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின் என் பது இளங்கோவடிகள் கூற்று. பன்மையாற் கூறாமல் ஒருமையாற் கூறியுள்ளமை நோக்கற்பாற்று. தேசந்தோறும் தெய்வந் தொழு- ஔவை மொழி. இன்றைய விஞ் ஞான யுகத்தில் எம்மவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்கிறார் திருமூலர். ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு என்பது பட்டினத்தார் உபதேசம். மகாகவி ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள் உலகின்பக்கேணியென்றார்.

மகாகவிபாரதி இந்தப் பல தெய்வ வணக்கத்தை வெகுவாகச் சாடினார்.

**ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள் – பல்**
**லாயிர வேதம் அறிவொன்றே தெய்வமுண்**
**டாமெனல் கேளீரோ.**
**சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்**
**சுருதிகள் கேளீரோ? – பல**
**பித்த மதங்களி லேதடு மாறிப்**
**பெருமை யழிவீரோ?**
**மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து**
**வெறுங் கதைகள் சேர்த்துப் – பல**
**கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை**
**காட்டவும் வல்லீரோ.**

பாரதிபாடல் அறிவே தெய்வம் 1.3.9

**தெய்வம் பலபல சொல்லிப் – பகைத்**
**தீயை வளர்ப்பவர் மூடர்**
**உய்வ தனைத்திலும் ஒன்றாய் – எங்கும்**
**ஓர் பொரு ளானது தெய்வம்**

மேலவர் முரசு 11

ஆசியிலே தெய்வ வழிபாடு ஏக தெய்வக்கோட்பாடு உடையதாகவே இருந்தது. ஆரியக்கலப்பாற் தெய்வங்களும் கூடி, ஆலயங்களும் அதிகரித்துள்ளன. கடந்த இரு தசாப்தங்களுள் வெளிநாட்டு ஆலயங்களில் இந்த அவலநிலை அதிகரித்தமை யதார்த்தம். பழம்பெருமை வாய்ந்த எகிப்திலே இரண்டாயிரம் தெய்வங்களை வணங்கிவந்தனர். கி.மு 1400 ஆண்டுக்காலத்தில் அந்நாட்டை அரசாண்ட ஃபாரோ அ(க்)கன் அ(ட்)டான் என்பவன் கடவுள் ஒருவனே என்ற கோட்பாட்டைப் பரப்பியதோடு கல்லாலோ செம்பாலோ, எந்தச் சிலை செய்தாலும் எகிப்திலே தடைசெய்யப்பட்டது. இறைவனுக்கு உருவமே இல்லை, ஆகாசம் எங்கும் நிறைந்துள்ளான் அவன் என்பதை அமுல் நடத்திய அம்மன்னனின் வரலாறு உலக சரித்திர ஏடுகளிலே பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட்டது.

மிகத் தொன்மையான சைவ வழிபாட்டில் இறைவன் ஒருவனே என்ற உண்மையாழப் பதிந்திருந்தது. திருவாசகமே இதற்குச் சான்றுபகர்கிறது. தமிழகத்திலும் இலங்கையிலும் விஞ்ஞானிகள், ஆத்மீகவாதிகள், தத்துவவாதிகள், வேதாந்திகள், சித்தாந்திகள், பக்தர்கள், ஆய்வாளர்கள் நிறைந்திருந்தும் உருவ வணக்கமும், தெய்வங்களும், ஆலயங்களும் காலந்தோறும் வளரக்காண்பது ஒருசமய விழுக்காடு எனலாம். விப்ரர்க்கு கடவுட் பெருக்கமும் சினகரப் பெருக்கமும் தேவைப்படலாம். ஆனாற் சைவசமயிகளாகிய வழிபாட்டாளர்க்குத் தேவை

வரவில்லை. இந்துவாகலாம். சைவனாக லாம் இதைத் தீவிரமாகச் சிந்திக்க வேண் டும். (நமக்காகவும் எதிர்காலச் சந்ததிக் காகவும்)

முதலிற் பல தெய்வக்கொள்கை இருந்து ஒரு தெய்வமானதாய் இருக்கலாம். பலர் ஒருவனிடம் கட்டுப்படவேண்டும். இது ஒரு தெய்வக்கொள்கை. முதற்கடவுள் என்ற கொள்கை வந்தது. பல தெய்வங் களை வணங்கி அலுத்துப்போனபிறகு யாராவது ஒருவரைத் தலைவனாகக் கொண்டு மற்றவர்கள் அவனுக்குக் கட்டுப் பட்டவர்களாய்ச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உருவாகி இருக்கலாம். வழி பாட்டுக்கு உரியவர் என்ற வகையில் இக் கடவுள் தத்துவம் உருவானதாக வியுக்தி மான்கள் கூறுகின்றனர். எவர் எப்படிக் கூறினும் சைவசமயக் கடவுளர்கள் கூடுவ தால் சமயத்திலே ஓர் வெறுப்பு ஏற்படுவது சகசமே. எனவே நாம் நாத்திகர்களாய் மாறவேண்டும். இன்றேல் இன்னோர் சம யத்துக்கு நாம் மாறவேண்டும் என்ற கரு உள்ளூர உருவாகிறது. இது இந்து மதத் துக்கோர் வீழ்ச்சியென்று கூறலாம்.

கற்பை நிறையென்றும் சொல்வர். நிறையென்றால் நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல் என்று பொருள்; நிறை ஆண் களுக்கும் முக்கியம் பெண்களுக்கும் அப் படியே. கற்பென்று சொல்ல வந்தால் இரு வருக்கும் பொது என்று கூறியவன் பாரதி. இந்த உண்மையை மையமாக்கித் தாயு மானவர் ஒரு புனித கருதுகோளைச் சைவ சமயிகட்கு முன்வைத்துள்ளார்.

**கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறே**
**ரிற்புறத் தவரை நாடார் ; யாங்களு மின்" வாழ்வுந்**
**தற் பொறி யாக நல்குந் தலைவ? நின்னல தோர் தெய்வம்**
**பொற்புறக் கருதோங் கண்டாய்! பூரணானந்த வாழ்வே**

தாயுமானவர் பாடல் கற்புறுசிந்தை 1

(இ.ள்.) கற்பு- கற்பானது, உறு -மிகுந்த, சிந்தை- மனத்தினை உடைய, மாதர்- பெண்கள், கணவரை- தமது கணவரை, அன்றி- விரும்புதலன்றி, வேறு - அந்நியமான, ஓர்- ஒரு இல் புறத்தாரை- அயல் வீட்டாரை, நாட்டார். விரும்பார்கள், (அதுபோல) யாங்களும்- நாங்களும், இன்பவாழ்வும்- சுக வாழ்க்கையும், தன்பொறி ஆகதன் செல்வமாக, நல்கும்- தந்தருளுகின்ற, தலைவ- முதல்வனே, நின் அலது- உன்னை யன்றி ஓர் தெய்வம். மற்றொரு தெய்வத்தை, பொற்பு உற- பொலிவடைதற் பொருட்டு, கருதோம்- நாடோம், பூரண ஆனந்த வாழ்வே.

விரிவுரை- பெண்கள் தங்கள் கணவரை நாடாமல் தங்கள் கணவனுக்குச் சமமாக ஆவது, உயர்வாக ஆவது எண்ணி அந்நிய புருடரை நாடின் கற்பிழந்து நரகத்தையடைவர். அதுபோன்று, சைவர்கள் தம் முதல்வனாகிய சிவபெருமானை நாடாமல், சிவபெருமானுக்குச் சமமானதாக ஆவது, உயர்வாக ஆவது அந்நிய தேவர்களை நாடின் துன்பத்தினை அடைவர் என்பதாம். அதாவது சிவனுக்கு மேற்பட்ட தெய்வம் எவருமில்லை என்ற உண்மையை உணர்ந்து வாழ்தல் முக்கியம்.

பூவைக் கல்யாணசுந்தர முதலியார்.

இவ்வுண்மையைத் திருமந்திரமும் எடுத்துக்கூறியுள்ளது.

பிறர் உங்களைப் புகழ வேண்டும் என்பதற்காக மட்டும் தானம் செய்யாதீர்கள்

**கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்**
**சுத்த சிவனெங்கும் தோய்வுற்று நிற்கின்றான்**
**குற்றந் தெரியார் குணாங் கொண்டு தோட்டார்**
**பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.**

திருமந்திரம் 1538.

மூடர்கள் பொருள் அறியாமல் கத்தும் கழுதையைப் போன்றவர்கள், சிவன் எங்கும் நீக்கமற நிற்கின்றான். என்றாலும், தம்மிடம் குற்றம் நீங்கமாட்டாதவர் சிவனிடம் உள்ள குணங்களைப் பாராட்டமாட்டார். உண்மையை இன்னது என்று உணர்ந்து கொள்ளாமல் மயக்கம் கொண்டு பிறந்து, இறந்து வருந்துவர்.

கலதிகள் - மூடர்கள், கோதட்டல்- பாராட்டல், பித்து ஏறி- மயக்கம் அடைந்து

எம் சொந்தச் சமயம் எது, வழிபடு தெய்வம் யார். சமய ஆசாரம். ஒழுகலாறுகள். பண்பாடு, நாகரிகம் என்ன என அறிந்து சைவ சமயவழி வாழ்ந்து பிறவியினின்றும் விடுதலை பெறுவோமாக.

## வெண்பா பாடிச் சிவனடி சேர்ந்த ஐயடிகள் காடவர்கோன்

பல்லவ மன்னன் காட வர்கோன்
பரமன் பால்பே ரன்பு கொண்டார்
பல்லவ னீசுரம் கோயில் தன்னை
பலரும் போற்றக் கட்டி வைத்தார்
எல்லா ஊரும் சென்று அங்கு
இறைவன் மீது வெண்பா பாடித்
தில்லை வந்து திருக்கூத் தன்தாள்
தினமும் தொழுது சிவனடி சேர்ந்தார்

கவிஞர். வ. யோகானந்தசிவம்

## *ஆவணி மாத ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய விசேட உற்சவ தினங்கள்*

06.08.2009 ஆடி 21 வியாழன்
கதிர்காம தீர்த்தம் விசேட உற்சவம்
14.08.2009 ஆடி 29 வெள்ளி
கார்த்திகை விசேட உற்சவம்
மகோற்சவ விரதம்

கொடுக்கக்கூடியவனுக்கு நண்பர்கள் அதிகம்

உ





# ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய
# வருடாந்த உற்சவ கால நிகழ்வு

| | |
|---|---|
| **கொடியேற்றம்** | **:20.08.2009 வியாழக்கிழமை மாலை 4.45 மணி** |
| **காலைத் திருவிழா ஆரம்பம்** | **: 24.08.2009 திங்கட்கிழமை** |
| **பூங்காவனம் 10ஆம் திருவிழா** | **: 29.08.2009 சனிக்கிழமை** |
| **சப்பறத் திருவிழா** | **: 02.09.2009 புதன்கிழமை** |
| **தேர்த்திருவிழா** | **: 03.09.2009 வியாழக்கிழமை காலை 9 மணி** |
| **தீர்த்தத்திருவிழா** | **: 04.09.2009 வெள்ளிக்கிழமை காலை 8 மணி** |

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் மூலமாக அமைவது நித்திய அன்னப் பணியேயாகும். அந்த வகையில் ஆச்சிரமப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பல வகையில் ஆதரவு நல்கும் அன்பர்கள் அடியார்களுக்கு சந்நிதி வேலவனது பூரண அருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து, வழமையான ஆதரவை நல்கி உற்சவ காலத்தில் நடைபெறும் அன்னப் பணிக்கு தங்கள் ஆதரவை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

சுபம் சாந்தி

சந்நிதியான் ஆச்சிரமம்

---

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
**T.P.No. 021-2263406**
**060 - 2219599**

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**www. sannithiyan. org**

---

அறிவை மேன்மேலும் கூர்மையாக்கிக் கொள்ளப் பயன்படும் கருவி கல்வி

உ

(தொடர்ச்சி...

# ராம பிரம்மம்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்**

தான் ஈஸ்வர அவதாரம் என்பது அறியாத அவதாரம் ராமாவதாரம். தான் ஈஸ்வரன் என்று பூரணமாக அறிந்து அவதரித்ததும், லீலை நடத்தியதும் பகவான் கிருஷ்ணனுடைய விசேஷம். இந்த வேறுபாட்டை உணர்ந்து இரு கதைகளையும் படிக்கவேண்டும். அவதார ஞானமில்லாத இராமன், மனிதனாக அடைந்த மனச்சோர்வும், பட்டதுயரமும் கண்ணன் கண்டதேயில்லை. பேய்ச்சியின் பாலுண்ட போதும், கட்டுண்டு மொத்துண்ட போதும் கவலையோ, துக்கமோ கண் ணனுக்குக் கிடையாது. கிருஷ்ணருக்கு முதலில் புன்முறுவல், பிறகுதான் செயல். இராமனுக்கு முதலில் செயல் பிறகுதான் முறுவல். பெண்களை அழ வைத்தவர் கிருஷ்ணர். பெண்ணுக்காக அழுதவர் இராமர். பாதிக்கப்பட்டு யுத்தம் செய்தவர் இராமர். யுத்தம் செய்ய ஒரு வாய்ப்பை உருவாக்கியவர் கிருஷ்ணர்

இராமர் தந்தை இறந்த செய்தி கேட்டு பிதிர்க்கடன் எல்லாம் செவ்வனே செய்தார். சடாயு இறந்தபோது இராமபிரான் தன் கைகளினாலேயே எள்ளும் தண்ணீரும் இறைத்து இறுதிச் சடங்குகளை முடிக்கிறார். மானிடர்க்கு இவை எல்லாம் உரித்தானவை. இவைகளை உரிய வேளைகளில் முறைப்படி செய்வதனால் நற்பலன்கள் சேரும்.

இராமர் சீதாப்பிராட்டியைத் தேடிச் செல்லும்போது அவரின் வேதனை அவருக்குத் தானே தெரியும். அவர் எதற்காக வருந்துகிறார்? இரகு வம்சத்திலே வந்த தன் மனைவியை மாற்றான் கொண்டு சென்றான் என்றால் மானம் எங்கே? இதைவிட வேறு அவமானம் உண்டா? அதற்காக வருந்துகிறார்.

**பூண்ட மானமும் போக்கருங் காதலும்**
**தூண்ட நின்று இடை தோமுறும் ஆருயிர்**
**மீண்டு மீண்டு வெதுப்ப வெதும்பினான்**
**வேண்டுமோ எனக்கு இன்னமும் வில் என்பான்.**

காதலும் மானமும் தன் உயிரை வெதுப்ப வெதும்புகிறார் இராமன். "என் மனைவியை அயலான் அபகரித்துக் கொண்டு போனபின்பு இந்த வில் எனக்கு எதற்காக? என்று சீறி எழுகிறார் பத்தினியை மீட்கமுடியாத வில்லினால் என்ன பயன்? "நான் சக்கரவர்த்தியின் மைந்தன். உலகிலே உள்ள எல்லா உயிர்களையும் காப்பாற்றுவதுதானே என் கடன். அதற்காக வில்லை எடுத்த நான் தாலி கட்டிய மனைவியைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் அவமானம் வேறு என்ன இருக்கிறது. மானம் இழந்த நிலையிலே இராமர் வில்லை நோக்கிச் சிரிக்கிறார். மனைவியைக் கேவலம் ஒரு அசுரன் கொண்டு போனான் என்றால் அதைவிட மானக் கேடான காரியம் உலகில் உண்டா? என்றாவது ஒருநாள் உயிர் போகும். ஆனால்

மானம் போய்விட்டால் வாழ்ந்தால் என்ன, வாழாமல் இருந்தால் என்ன. இரண்டும் ஒன்று தான். மானமே பெரிது. தன் மயிர்த் தொகுதியில் ஒரு மயிர் போய்விட்டாலும் கவரிமான் உயிர் வாழாதாம்! அதுபோல மானம் போய்விட்டால் உயிர் எதற்கு என்று தயங்காத மனப்பண்பே மானம். இராமன் உலகைப் புரக்கப் பிறந்தவன். மாற்றான் கையில் மனைவி சிக்கியபோது வில்லைப் பார்த்துச் சிரிப்பதில் நியாயம் இருக்கிறது. குரங்கு இலங்கையை எரித்ததை மானக்கேடாக இராவணன் எண்ணினான். மாற்றான் மனைவியை மனத்தினால் நினைத்து சிறை செய்தது அவனுக்கு மானக்கேடாகத் தெரிய வில்லை. எது மானம், எது மானமற்ற செயல் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முருகப்பெருமான் சூரனை நோக்கி, "சூரபன்மனே, அழியும் மின்னலைப் போன்று நீ எடுத்த வடிவங்களையெல்லாம் கண்டோம். அழியாத நமது பெரிய வடிவத்தை உன் தவ வலிமையினால் இதோ பார்ப்பாயாக" என்று திருவாய் மலர்ந்து அதனைப் பார்ப்பதற்கு ஞானக் கண்ணையும் தருகிறார் அறுமுகவள்ளல். மெஞ்ஞானிகளுமே காணத் தவங் கிடக் கும் காட்சியைப் பகைவனுக்குக் காட்டு கிறார். கந்தவேள் காட்சியைக் கண்குளிரக் காண்கிறான் சூரன். மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி யன்றோ! அழியாத வரம்பெற்ற காரணத் தினால் நான் காண்கின்றேன். ஆயிரகோடி மன்மதர்களுடைய அழகு எல்லாம் ஒருங்கே திரண்டு உருவம் எடுத்தாலும் நிர்மல மாகிய இவரின் திருவடியின் திவ்ய சௌந் தர்யத்துக்கு ஆற்றாது என்றால் இவரது விஸ்வரூபத்துக்கு உவமை சொல்ல வல் வல்லவர்? கண்களில் ஆனந்த பஷ்யம் உண்டாயிற்று. இப்பெரு மானிடத்து எளி யேனுக்கு அன்பு பிறந்தது. மனம் உருகி யது. எனது அகந்தை போயிற்று. ஞானம் உண்டாயிற்று. பரமேசுர வடிவத்தை நான் தரிசித்தது நான் செய்த தவத்தின் பயன் அன்றோ! என் கால்கள் இந்தப் பெரு மானை வலம்வருதல் வேண்டும். கைகள் தொழுதல் வேண் டும். தலை வணங்கல் வேண்டும். நாக்குத் துதித்தல் வேண்டும். தீமை அத்தனையும் அகன்று இப்பெரு மானுக்கு அடிமையாய் நான் வாழ்தலே என் மனம் விரும்புகிறது. ஆனால் மானம் ஒன்றே என்னைத் தடுக்கிறது. பின்பு எம் பெருமான் சூரபன்மனுக்குக் கொடுத்த ஞானத்தை நீக்கிவிடுகிறார். சூரனுக்கு அகங்காரம் தலை எடுக்கிறது. அப்பெரு மான் முழுமுதற் கடவுள் என்று உணர்ந்த பின்பு ஆளாவதற்கு அவன் மனம் துடித் தது. மானம் தடுத்தது.

உலக வாழ்க்கைக்கு வேண்டி யதுதான் இந்த மானம். ஆனால் ஆண்ட வன் முன்னிலையிலே, சமய வாழ்விலே, சன்மார்க்க நெறியிலே இந்த மானம் புகுந்து மண்ணாக்கிவிடாமல் கருத்தாக இருக்கவேண்டும். ஆண்டவன் முன்னிலை யில் நமது மானம் அழியவேண்டும். யான், எனது என்ற செருக்கில் சீறுகின்ற மானம் இருக்கும்வரை திருவருள் நலன் கிடை யாது. யான், எனது என்னும் செருக்கு அறுப்பவன் வானோர்க்கு உயர்ந்த உல கம் புகுவான். நம்மை ஆண்டவனிடத்திலே இட்டுச்செல்ல இத் திருவாசகம்.

**மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கை நல்லீர்**
**வானம் தொழும் தென்னான் வார்கழலே நினைந்தடியோம்**
**ஆனந்தக் கூத்தன் அருள் பெறில் நாம் அவ்வணமே**
**ஆனந்தம் ஆகிநின்று ஆடாமோ தோணோக்கம்**

ஆண்டாள் உடலும் உள்ளமும் கண்ணனிடம் ஒன்றிய நிலையில் பாடல்களின் மூலம் அந்தரங்க உணர்வுகளை வெளிப்படுத்துகின்றாள். இறைவனும், ஆத்மாவும் ஒன்று என்ற பேரின்பம் புலப்படுகிறது. ஆண்டாள் கண்ணன்மீது அதீத பிரமை கொண்டதனால், கண்ணன்மீது காதலால் பித்துக்கொண்டவளானதால் மானத்தைப் பெரிதாகப் பார்க்கவில்லை. காதல், பக்தி கொண்ட பித்தர்களுக்கும், குழந்தைகளுக்கும் மானம் என்பது இல்லை. ஆண்டாள் எந்தப் பொருள்களைக் காண்கிறாளோ அவை எல்லாம் கண்ணனை ஞாபகப்படுத்துகின்றன. அதனால் வேதனைப்படுகிறாள்.

"நாணி இனியோர் கருமமில்லை" என்று திருவாய் மொழியில் கூறுகின்றாள். வெட்கப்பட என்ன இருக்கிறது என்கிறாள். காதல் மிகுதியால் ஆற்றாமை கொண்ட கோதை எப்படியாவது கண்ணன் வாழும் இடம்தேடிச் சென்றுவிடவேண்டும் எனத் துடிக்கிறாள். எனவே ஆண்டவன் முன்பு யான், எனது என்ற மானம் அழிந்தால்த் தான் திருவருள் கைகூடும்.

இராவணன் அழியுங் காலம் நெருங்கியதால் மானமே உயிரினும் பெரிது என்று கும்பகர்ணன், இந்திரஜித்து ஏனையவர்களும் மாண்ட பின்பு தானே போர்க்களம் வருகிறான். முதல்நாள் போரிலே சகலதும் இழந்து தனியனாக நிற்கிறான். அப்போது அவனைக் கொன்று விடலாம். ஆனால் கருணை வள்ளல், தசர நந்தனன், கோசலைதன் மணிவயிறு வாய்த்த குலமதலை, ஜானகிராமன், தசாவதாரன், ராமப்பிரம்மம் அவன்மீது இரங்கிக் கருணை காட்டுகிறார்.

**ஆளையாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த**
**பூளையாயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு**
**நாளை வாவென நல்கினான் நாகிளங்கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்**

இராவணன் மன்னிக்க முடியாத பெருங் குற்றத்தைப் புரிந்தபோதிலும், கிருபா சமுத்திரமாகிய அறங்காத்த ராமன், கோசல நாடுடை வள்ளல், "இன்று போய் போர்க்கு நாளைவா" என்றான்.

(தொடரும்...

## தாயும் சேயும்

பிறந்த குழந்தை இவள் தாய் என்று நினைக்கும்படியான அறிவு பெறுவதில்லை. இது என் குழந்தை என்று அன்னை நினைத்து அரவணைக்கின்றாள். பின்பு குழந்தை சிறிது அறிவு விளக்கம் பெற்று இவள் என் தாய் என்று நினைத்துத் தாயிடம் ஓடுகின்றது. இதுபோல் உலகத்திற்குத் தாயும். தந்தையுமாகிய இறைவன் உயிர்களை நினைக்கின்றான். பின்னர் உயிர்கள் இறைவனை நினைத்து நற்கதி அடைகின்றனர்.

**இயற்கையின் விதியை மீறியதற்கு அது அளிக்கும் தண்டனையே நோய்**

உ

# அம்மாவிற்குரிய பெருமை அவனியில் வேறு எவருக்குமில்லை

திரு கு. குணாளன் அவர்கள்

அம்மாவிற்கு அன்பு வற்றிப் போகுமா? தனது பிள்ளையை அவள் மறப்பாளோ? நிச்சயமாக அது நடக்காது. அன்னையின் அன்பு வற்றாத நீரூற்றுப் போன்றது. அந்த நீரூற்றின் தண்ணீரை அள்ளிப்பருகக் கிடைத்த மானிடம் உண்மையில் பேறுபெற்றது.

அன்னையின் அன்பு, பாசம், கருணை எல்லாவற்றுக்குமே ஈடிணை இவ்வுலகில் ஏன் எவ்வுலகிலும் கிடையாது. அன்னையிடம் அன்பு பாராட்டாதவர் இறைவனிடம் அன்பு வைப்பது பாலைவனத்தில் பொழிந்த மழைநீர் போன்றதே. அன்னைதான் நாம் கண்கண்ட தெய்வம்.

அதனால்த்தான் "தாயிற் சிறந்த கோயிலுமில்லை" என்றார் ஓர் அறிஞர். தாயே இங்கு கோயில் ஆகிறாள் என்றால் தெய்வமும் அவள்தானே. எனவே நாம் எல்லோரும் எம் அன்னையின் அடியினைத் தினமும் தொழுது வருவோமாயின் மலை அளவு துன்பம் வருவதாயினும் அது பொடிப்பொடியாகி இருக்கும் இடம் தெரியாது மறைந்துபோகும். ஆனால் இன்றைய இளைய சமுதாயம் அன்னையை ஏன் பெரியோரைப் பேணுவது என்பது அருகி வருவதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது. இது மிகவும் வேதனைக்குரிய ஒரு செயலாகும்.

அன்னையின் அன்பு என்பது விபரிக்கமுடியாத ஒரு அரும்பெரும் பொக்கிஷமாகும். அந்த அன்பின் பிடியில் வாழ்பவனுக்கு எல்லாமே வெற்றிதான். தாய்மைக்கு முதலிடம் அளிப்பவன் வாழ்விலும் முதன்மைநிலையை அடைவான் என்பது சான்றோரின் கருத்து.

அன்புமட்டுமா? பாசம், கருணை என்பனகூட அந்த வற்றாத ஜீவநதியில் இருந்துதானே உருவாகின்றன. அம்மா என்றால் அன்பு. அம்மா என்றால் பாசம். அம்மா என்றால் கருணை. அம்மா என்றால் பொறுமையின் வடிவம். இப்படியாக அன்னையின் பெருமைகளை எடுத்து இயம்பிக்கொண்டே போகலாம்.

தாய்மைப்பேறு என்பது தெய்வீகமானது. உயிரோட்டமானது ஒரு குழந்தையைத் தாய் பிரசவிக்கும்போது அவள் எமதர்மராசனிடம் சென்று திரும்புகிறாள் என்று நம் மூதாதையர் கூறக்கேட்டிருக்கிறோம்.

உண்மைதான் உயிர்போய் உயிர் வரும் நிலைதான் அது. தன் உதிரத்தை கருவாக்கி, உதிரத்தில் பத்துத் திங்கள் சுமந்து பெற்றெடுத்த பின்னரும் தன் உதிரத்தையே மீண்டும் பாலாகத் தரும் அந்த உயரிய பண்பு வேறு யாருக்கு வரும்? அன்னைக்கு மட்டுமே அந்த உயரிய பண்பு வரும்.

"அம்மா என்பது தமிழ்வார்த்தை. அதுவே உலகில் முதல் வார்த்தை என்றான் ஒரு கவிஞன். பூமியில் பிறக்கும் குழந்தை 'அம்மா' என்று குரல் எழுப்பிக்

கொண்டேதான் பிறக்கின்றது. ஏன் விலங்கினங்கள்கூட 'அம்மா' என்றுதான் குரல் எழுப்புகின்றன.

ஆபத்து வேளையிலும், தடுக்கி விழுந்தாலும்கூட நம் வாயில் இருந்து வெளிப்படும் 'ஓசை' அம்மாதானே. இதனை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இத்தனை சிறப்புக்கள் கிடைக்கும் அம்மாவிற்கு நம் சமுதாயத்தில் கிடைக்கும் பரிசுதான் என்ன?

தடி ஊன்றி நடக்கும் அன்னைக்கு ஆறுதல் அளிக்கப்படுகிறதா? அன்னையை அன்பாகக் காப்பவர் நம் மத்தியில் எத்தனை பேர் கருவில் நம்மைத் தாங்கி சுமந்தவள் இன்று அனாதை இல்லத்தில் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் இழிநிலை.

வாழ்க்கையில் புதிய புதிய உறவுகள் தோன்றியதும் எம்மை உருவாக்கிய தாய் அந்நியமாகி விடுகிறாள். தாயே; "உன்தயவு எனக்கு இனித் தேவை இல்லை" என்பதுபோல் ஒதுக்கிவைத்து விடுகின்றார்கள். அதற்குப் பதில் "போதும் அம்மா நீ என்னைத் தாங்கியது. இனி உயிர் உள்ளவரை நான் உன்னைத் தாங்குவேன். என்று நாம் கூறுவோமே ஆனால் அந்தத் தாய் எத்தனை சந்தோஷமும், மனநிறைவும் அடைகிறாள். அப்படி நாம் எல்லோரும் எம் அன்னையை போற்றிக் காப்போமானால் எம் வாழ்வில் தோல்வியே கிடையாது. எப்போதும் வெற்றியே கிடைத்த வண்ணம் வாழ்வோம் என்பதில் சந்தேகம் கிடையாது என்பது எனது கருத்து.

தாய்க்குப்பின் தான் தாரம். தாயைக் கண்ட பின்புதான் அவன் ஒரு தாரத்தின் வாழ்க்கைத் துணையாகிறான். தாய் இல்லையேல் அவன் ஏது? ஏன் தாரம்தான் ஏது? அந்தத் தாரமும் ஒரு தாய் வயிற்றுப் பிறப்புத்தானே? தன் தாயை அறிந்தவள் கணவனின் தாயை துச்சமாக மதிப்பது ஏன்?

தாரம் வந்ததும் அன்னையைப் புறக்கணிப்பவன் உண்மையில் மனிதன் அல்லன். அவன் வெறும் சடப்பொருளே. ஏன் என்றால் தாரத்தால் தானே அவன் ஆட்டிப்படைக்கப்படுகிறான். அவனாக இயங்காதுவிடின் அவன் சடப்பொருள் தானே.

பெற்ற தாயை சிலர் சிலவேளைகளில் "என்னைக் கண்டிக்க நீயார்? என்று கேட்பதனை கேட்டிருக்கிறோம்.

இப்படியாக அன்னையிடம் கேள்வி கேட்பவர் யாராக இருந்தாலும் தன் மனதில் கைவைத்து ஒருமுறை சிந்திக்கட்டும். இக்கேள்வி அவர் மனதில் இருந்து எப்படி எழலாம்?

நீ யார்?

எம்மை எல்லாம் கருவறையில் உருவாக்கிய அன்புத் தெய்வம். இந்தக் கேள்வியை இன்று நாம் கேட்பதற்கு உயிர், உடல் தந்தவள் அவள் அல்லவா. நாம் பிறந்திராவிட்டால், எம்மை, எம்தாய் பெற்றிராவிட்டால் இந்தக் கேள்வியைத் தானும் நாம் எப்படிக் கேட்டிருப்போம்.

வாய் கூசாமல், மனச்சாட்சி இல்லாமல், கூனிக்குறுகாது இப்படிக் கேட்பது மனித தர்மமாகுமா? இதைவிட கொடூரம் வேறென்ன வேண்டும்? இவற்றையெல்லாம் விடுத்து வாள் கொண்டு அன்னையின் இதயத்தையே அறுத்திருக்கலாம்.

பெற்றவருக்கு இல்லாத உரிமை, அக்கறை எல்லாம் மற்றவர்களுக்கு எங்கிருந்து வரும். வாழ்வின் உயிர்நாடியே அன்னைதான். மற்ற எல்லா உறவுகளுமே இடையில் வந்தவையே ஆகும். எமக்கு உயிர் தந்தவளைவிட உறவாக வந்தவள்

எந்த விதத்தில் உயர்ந்துவிட்டாள்? தாய்மையைப் போற்றுவதும், சீராட்டுவதும் மானிடராய்ப் பிறந்த நம் ஒவ்வொருவரினதும் கடமை. அதைவிடுத்து தூற்றுவதும், ஏசிப் பேசிப் புறக்கணிப்பதும், காலால் எட்டி உதைப்பதுமல்ல.

தாயுடன் சேர்ந்தால்த்தான் தந்தைக்கும் பெருமை. அதன் காரணத்தால்த்தான் அன்னையைச் சிறப்பிக்கும் போதெல்லாம் நாம் தந்தையையும் நினைவு கூருகிறோம்.

தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தைசொல் மிக்க மந்திரமும் இல்லை. முதலில் தாயும், பின் தந்தையும் நாம் கண்கண்ட முன்னறி தெய்வங்களே.

அன்னையே எல்லா உறவுகளிலும் முதலானவள். தாய்மையே தரணியில் முதன்மையானது. பெண்ணிற்கு பெருமை தருவது தாய்மை ஆகும். அப்படி ஆன தாய்மையை நாம் எல்லோரும் எப்பொழுதும் போற்றி, பேணி மதித்து நடந்து பெற்றவர்க்கு பெருமை தேடிக்கொடுக்க வேண்டும் என்பதே எமது பேரவா. இதை விடுத்து எதிர்மறையாக நாம் நடந்து கொண்டால் எம்வாழ்வில் நிம்மதி என்பது எள்ளளவிற்கும் கிடையாது. எனவே எமது சிந்தனையை நல்ல வழியில் செலுத்தி எமது அன்னை, தந்தை இருவரையும் வாழ வைக்கவேண்டும்.

"அன்னைக்கு நிகராக இப்பாரினில் யார் உளர்"

# ஆவணி மாத குருபூசை தினங்கள்

01.08.2009 ஆடி 16 சனிக்கிழமை

*கலியர், கோட்புலியார் குருபூசை*

04.08.2009 ஆடி 19 செவ்வாய்

*பட்டணத்தடிகள் குருபூசை*

14.08.2009 ஆடி 29 வெள்ளி

*மூர்த்தியார், புகழ்ச்சோழர் குருபூசை*

20.08.2009 ஆவணி 04 வியாழன்

*இளையான் குடிமாறநாயனார் குருபூசை*

22.08.2009 ஆவணி 06 சனி

*மறைஞான சம்பந்தர் குருபூசை*

30.08.2009 ஆவணி 14 ஞாயிறு

*குங்குலியக் கலய நாயனார் குருபூசை*

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத்தொடர்- 27)

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

திருமந்திரத்தின் ஏழாம் தந்திரம் காலோத்தராகமத்தின் சாரமாக அமைந்துள்ளது. இத் தந்திரம் முப்பத்தெட்டு உபதலைப்புக்களாகப் பிரிக்கப்பட்டு நானூற்றிப் பதினெட்டுப் பாடல்களைத் தன் அகத்தே கொண்டு விளங்குகிறது. ஆறு ஆதாரங்கள் பற்றிய விளக்கங்களோடு அண்டலிங்கம் (உலகசிவம்), பிண்டலிங்கம் (உடற்சிவம்), சதாசிவலிங்கம் (உலகமுதற்சிவம்) சூத்துமலிங்கம் (உயிர்ச்சிவம்), ஞானலிங்கம் (உணர்வுச் சிவம்), சிவலிங்கம் (சிவகுரு) ஆகிய ஆறு லிங்கங்களும், சமய சிறப்புப் போதனை, ஆன்மாவில் கலந்துள்ள சிவனுக்கு இயற்றும் வழிபாடு, குருவாகிய சிவனுக்கு இயற்றும் வழிபாடு மாகேசுரப்பூசை, அடியார் பெருமை, உணவு விதி. பல்வகையான முத்திரைகள், யோகிகள் அடையும் பேறுகள், அவர்கள் தங்கள் உடல்களை விடும்முறை, இடகலை, பிங்கலை நாடிகள், புலன்களை அடக்கும்முறை, குருவின் தன்மை, கூடா ஒழுக்கம் முதலிய யாவும் விளக்கப்பட்டுள்ளன.

ஏழாம் தந்திரத்தின் ஆரம்பத்தில் ஆறு ஆதாரங்கள் பற்றி விளக்கப்படுகின்றது. உடலில் சூக்கும வடிவாகவுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களைப் பற்றியும் விளக்கி இவ் ஆதாரங்களில் இறைவனைத் தியானித்து முறையே மேல் சென்று ஆன்மா சிவத்தோடு இணையும் பேற்றினைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பகவத் குணங்களான அவாவின்மை, ஈசுவரத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் ஆகியவற்றை இந்நெறியில் நிற்பவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது. சூக்கும உடம்பின் விளக்கமாக அமைவதே தூய உடம்பாகும். சூக்கும உடம்பின் பக்குவத்திற்கேற்ப தூய உடல் அமையும்.

மனிதப்பிறவி அரியது என்றும், உடல் இறைவனின் திருக்கோயில் என்றும் சித்தர்கள் கூறுகின்றனர். அத்தகைய அரிய உடலைச் சிலர், காமக்களியாட்டங்களில் ஈடுபட்டுப் பாழாக்கி விடுகின்றனர் என்றும் அவர்கள் இரக்கப்படுகின்றனர்.

**ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே –இதை**
**உப்பிட்ட பாண்டம் என்று எண்ணாதே**

என்று கொங்கணர் என்ற சித்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

மனித உடலின் மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கும் ஓர் அற்புத சக்தியே குண்டலினி சக்தி. யோகப்பயிற்சியின் மூலம் இதனை மேலே எழுப்பி வேண்டிய பலனைப்பெற முடியும். இதில் தெய்வீக சக்தி உண்டென்பர். சாதகர்கள் தம் யோக வலிமையால் பல சித்திகளைப் பெற் றுக்கொள்வர். குண்டலினி சக்தியை மூலா தாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநா கதம், விசுத்தி, ஆஞ்ஞை (புருவநடு)

என்ற ஆறு நிலைப்பாடுகளினூடாக மேலே எடுத்துச்சென்றால் சமாதிநிலை கிடைக் கும். இந்நிலையைப் பெறுவோர் பிணி, மூப்பு, சாக்காடு இல்லாமல் நலமாக வாழ முடியும்.

மிகவும் ஆற்றல் வாய்ந்த குண்டலினி சக்தியானது பாம்புபோன்று பிடித்து வைத்திருக்க முடியாதது. அதனைப் பாம்பாக உருவகித்து அதன் வல்லபங்களையெல்லாம் பாம்பாட்டிச் சித்தர் பாடி உள்ளார். அவரது பாடல்களில் பாம்பாகக் கூறப்படுவன எல்லாம் குண்டலினி சக்தியைப் பற்றியனவே ஆகும்.

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களிலே ஆரோக்கிய வாழ்விற்குரிய உணவுப் பழக்கம், உடற்பழக்கம், மன ஒழுக்கம் முதலான விடயங்களும், கரு உற்பத்தி, உடற்கூறுகள் என்பன பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. சப்த தாதுக்களால் ஆனது உடல். உடல் சப்த தாதுக்களில் அழிவுகள் ஏற்பட்டுக் கழிவுகளாக நீங்குவது இயல்பு. உதாரணமாக குருதியிலுள்ள செங்குருதிக்கலங்கள் தம் வாழ்க்கைக் காலத்தின் பின் மண்ணீரல், ஈரல் முதலிய உறுப்புக்களில் அழிக்கப்படுகின்றன. பின்பு இவை பிலரூபின், பிலிவீடின் என்னும் இரு மஞ்சள் நிறமுடைய கழிவுப்பொருட்களுடன் சேர்ந்து வெளியில் கழிக்கப்படுகின்றன எனச் சித்த மருத்துவம் கூறுகிறது. இக் கருத்தினைப் பாம்பாட்டிச் சித்தரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்**
**மல்கும் புழுக்கூட்டுடன் மேல் வண்ணத்தோல்**

என்றும்

***சலக்குழிக்குள்ளே நாற்றம் சார்ந்து சேறென்றும்***
**தான் அறிந்து தள்ளினோம் என்று ஆடுபாம்பே.**

இவ்வுடலில் உள்ள ஆறு ஆதாரங்களையும் தாமரையாகவும், சக்கரமாகவும் ஞானிகள் உரைப்பர். மூலாதாரம் நான்கு இதழ்த் தாமரை வடிவாகவும், சுவாதிட்டானம் ஆறு இதழ்த் தாமரை வடிவாகவும் அநாதகம் பன்னிரண்டு இதழ்த் தாமரை வடிவாகவும், விசுத்தி பதினாறு இதழ்த் தாமரை வடிவாகவும் காணப்படுகிறது. இந்த ஐந்து ஆதாரங்களையும் தாண்டினால் ஆஞ்ஞையாகிய புருவ நடுவில் அமிர்தத்தைச் சுவைக்கலாம். சிவ ஒளியைப் பெறலாம்.

**நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்**
**கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்**
**மூலம் கண்டு ஆங்கே முடிந்த முதல் இரண்டும்**
**காலம் கண்டான் அடி காணலும் ஆமே.**

உலகமே சிவனது அடையாளமாக இலிங்க வடிவமாகக் காட்சி தருகிறது. எட்டுத்திசைகளிலும் வியாபித்திருக்கும் அஷ்டலிங்கம் சிவமேயாகும். சிவன் தடத்தநிலையில் அருவுருவத்திருமேனியாகக் காட்சி தரும் வடிவமே சிவலிங்க வடிவமாகும். யோகம் முதல் வீடுபேறுவரை அனைத்தையும் அருளுவது

**தியானம் என்ற ஆன்மாவின் கண்ணாடி மூலம் இறைவனை அருகிற் காணலாம்**

சிவமேயாகும்.

அன்பியல் வாழ்க்கையாகிய போக மும் அருளியல் வாழ்க்கையாகிய முத்தியும் சிவன் அருளாலேயே கிடைக்கிறது. போகத்தின் பயனாகிய சிற்றின்பமும் முத்தியின் பயனாகிய பேரின்பமும் ஆன்மாக்களுக்கு கிடைப்பதற்கு சிவனே துணையாக நிற்கின்றான். மாயையில் இருந்து தோன்றும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து ஆன்மா சிவமாகி நிற்பதற்குத் துணையாகி நிற்கும் வடிவம் சதாசிவ மூர்த்தமாகிய சிவலிங்க வடிவமே ஆகும். சிவலிங்க வடிவினனாகக் காட்சி தருதல் போல அகத்திலே யோகசக்தியாகக் குண்டலினியாக இருந்தும் அருள் புரிவான்.

**போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்**
**ஆகமும் ஆறாறு தத்துவத் தப்பாலாம்**
**ஏகமும் நங்கியிருக்குஞ் சதாசிவம்**
**ஆகம வித்துவா வானுஞ் சிவமே**

சிவனுடைய அகண்ட வியாபகத்தை உணர்ந்தபோது சீவனது உடம்பே சிவனாரது கோயிலாக மாறுகிறது. மானிட உடம்பின் வடிவம் சிவலிங்கம் ஆகும். மானிட உடலும் உடலைச் சூழவுள்ள பகுதியும் அறிவாலயம் ஆகும். மானிடனின் உடல் சதாசிவ வடிவமாகிய சிவபெருமானின் அரு உருவத் திருமேனியாகும். மானிடரின் உடம்பிலுள்ள அசைவெல்லாம் கூத்தப்பெருமானின் திருநடனமாகக் காட்சி தருகிறது. மக்கள் தமது உடலை நடமாடும் கோயிலாகப் பேணி வாழவேண்டும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

**மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுட ராக்கை வடிவு சிதம்பரம்**
**மானுட ராக்கை வடிவு சதாசிவம்**
**மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே**

இறைவன் ஒலி வடிவாகவும், ஒளி வடிவாகவும் காட்சி தருவான் என்றே வேதங்கள் கூறுகின்றன. நாதப்பிரம்மமாய் இருக்கின்ற இறைவனை நாதோபாசனை மூலம் வழிபடலாம் என்றே இந்து சமயத் திருநூல்கள் கூறுகின்றன. சிவனுடைய அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகிய சிவசூரிய வடிவத்தைப் பாட்டினால் நான் பணிய அவன் ஒலியினால் தன்னுடன் ஒன்றியிருந்தான் எனத் திருமூலர் கூறுகின்றார்.

**உணர்ந்தேன் உலகினில் ஒண்பொருளானைக்**
**கொணர்ந்தேன் குவலயம் கோயில் என் நெஞ்சம்**
**புணர்ந்தேன் புனிதனும் பொய் அல்ல மெய்யே**
**பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே.**

ஆன்மா அறிவிக்க அறியும் தன்மை உடையது. சுதந்திரம் இல்லாத சீவனுக்கு தலைமை பொருந்தாது. நானே பிரம்மம் என்று கூறுபவர்கள் அறியாமைக் குழியில்

வீழ்ந்து துன்புறுவர். பிணிப்புண்ணப்பட்ட மையால் பசுப்பிணிப்பி என்று அழைக்கப் படும். மலங்களால் பீடிக்கப்பட்டது என்பதே இங்கு குரால் எனக்கூறப்பட்டது. மலங்க ளால் கட்டுண்ட என் உள்ளத்தைக் கோயி லாய்க் கொண்டவன், பாம்பு அணிந்த சடையை உடையவன், அக்கினி நீர் பொருந்தப்பெற்றவன், செய்யும் புண்ணியம் அனைத்துமாய் உடையவனே இறைவன் ஆவான். இத்தகைய இயல்புடைய இறைவன் தலைவன் இல்லைத் தாமே தலைவன் என்று கூறுபவர்கள் அறி யாமையாகிய இருளில் மூழ்கியிருக் கிறார்கள்.

**பிரான் அல்லன், நாம் எனின் பேதை உலகம்**
**குரால் என்னும் என்மனம் கோயில் கொள் ஈசன்**
**அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்**
**பொரா நின்றவர் செய் அப்புண்ணியன் தானே.**

பல பிறவிகளிலும் ஆன்மாக்கள் செய்த வினைகள் நீங்குவதற்கு இறை வன் பாதங்களைச் சிக்கெனப் பிடித்து வழிபடுதலே சிறந்த வழியாகும். சிவனு டைய அட்ட மூர்த்தங்களில் சிவசூரிய வடி வமும் ஒன்றாகும். சூரியக் குடும்பமாகவே இந்த அண்ட சராசரத்தில் காணப்படும் கோள்கள் யாவும் இயங்குகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றுவது ஒருநாள் என்றால் பூமி சூரியனைச் சுற்றும் காலம் ஒரு வருடம் ஆகும். நாள், மாதம், ஆண்டு ஆகியவற்றைச் செய்கின்ற சிவக்கதிரவ னான சதாசிவத்துடன் சக்தியை வழிபடி னும், இருவரையும் வெவ்வேறாக எண் ணாது ஒருவராய் நினைத்து தியானித் தாலும் பயன் ஒன்றே ஆகும்.

சக்தி சிவத்தினுள் அடங்கிச் செயல்புரியும் வடிவமே சதாசிவ மூர்த்தமாகிய சிவலிங்க வடிவம் ஆகும். அம்மை அப்பர் ஆகிய இருவருடைய திருவுருவங்களில் எதனை வழிபட்டாலும் இருவரும் வேறுருவில் ஒருடம்பாய்த் திரிகின்றமையால் எல்லாம் சதாசிவ வழிபாட்டையே குறிக்கும்.

**வேண்டி நின்றே தொழுதேன் வினைபோய் அற**
**ஆண்டு ஒரு திங்களும் நாளும் அளக்கின்ற**
**கான்தகை யானொடும் கன்னி உணரினும்**
**மூண்டகை மாறினும் ஒன்றது ஆமே**

முதல்வனாகிய சிவபெருமான் ஒருவனே முழுமுதற்பொருள் என்பதைத் திருவருளால் உணர்ந்தேன். எம்பெரு மானின் திருவடிகளே என்றும் நன்மை பயப்பன என்பதை உணர்ந்து அவனை நாள்தோறும் பூவும் நீரும் கொண்டு வணங்கி வந்தேன். நனவிலும் கனவிலும் இறை நினைப்போடு வணங்கியமையால் ஐம் பொறிகளின் வழி அறிவு செல்லவில்லை. வஞ்சனையைச் செய்து ஆன்மாவைப் படுகுழியில் தள்ளிய ஐம்புலன்களும் ஞானப்புலன்களாக மாறின. ஆன்மாவின்

அறிவு சிவத்தினுடைய திருவருளுடன் பொருந்தியது. சிவன் தனது திருவருள் சக்தி முழுவதையும் ஆன்மாவில் பதியச் செய்வான்.

**ஒன்று எனக் கண்டேன் எம் ஈசன் ஒருவனை**
**நன்று என்று அடியினை நான் அவனைத் தொழ**
**வென்ற ஐம்புலனும் மிகக் கிடந்து இன்புற**
**அன்று என்று அருள் செய்யும் ஆதிப்பிரானே**

ஞானம் என்பது மோன வரம்பு. உலகியல் பற்றுக்களாகிய ஆசை என்னும் சங்கிலித்தொடர் அறுந்ததும் பேசா அநுபூதியாகிய ஞான நிலையை (மோனநிலை) ஆன்மா பெற்றுவிடும்.

**ஆசா நிகளந் துகளாயினபின்**
**பேசா அநுபூதி பிறந்ததுவே**

எனக் கந்தரநுபூதி இதனைக் குறிப்பிடுகிறது. பூரண சரணாகதியாக இறைவனிடம் நம்மை நாம் ஒப்படைத்து விட்டால் அவன் தன்னை நமக்குத் தருவான். நான் என்னை உம்மிடம் தந்ததால் நீர் உம்மை என்னிடம் தந்தீர். இந்தப் பண்டமாற்று வியாபாரத்தில் தனக் குக் கிடைத்ததோ பெருவெற்றி என்பதை

**"தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்**
**சங்கரா ஆர் கொலோ சதுரர்"**

என மணிவாசகப் பெருமான் தனது தெய்வவாசகமாகிய திருவாசகத்தில் குறிப்பிடுகின்றார்.

விரும்பியவாறு எல்லா இடங்களிலும் அனுபவம் இல்லாது பிதற்றித் திரியும் அறிவில்லாத என்னை என்னிடம் உள்ள குற்றங்களை எல்லாம் அகற்றி ஆவியோடு ஒட்டி உள்ளுணர்ந்துள்ள மாசு அனைத்தையும் இறைவன் தன் திருவருளால் நீக்கினான். பின்பு தன்னையும் என்னையும் தட்டொக்க மாறினான். என்னைத் தான் பெற்றுக் கொண்டு தன்னை எனக்குத் தந்தான். இந்த வாணிபத்தில் எனக்கு பெரும் இலாபம் கிடைத்துவிட்டது எனத் திருமூலர் பின்வரும் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

**பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை**
**ஒட்டடித்துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்**
**தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்**
**வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே.**

(தொடரும்...

# ஔவையார் அருளிச் செய்த

# கொன்றைவேந்தன்

## மூலமும் உரையும்

*16. கிட்டாது ஆயின் வெட்டென மற.*

ப-ரை. கிட்டாது ஆயின்- (இச்சித்த ஒரு பொருள்) கிடையாதானால், வெட்டென- சீக்கிரத்திலேதானே, மற- (அப்பொருளை) மறந்துவிடு.

*17. கீழோர் ஆயினும் தாழ உரை.*

ப-ரை. கீழோர் ஆயினும்- (கேட்பவர் உனக்குக்) கீழ்ப்பட்டவராய் இருந்தாலும், தாழ- (உன்சொல்) வணக்கமுடையதாய் இருக்கும்படி, உரை- (நீ அவருடன்) பேசு.

*18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.*

ப-ரை. குற்றம்- குற்றங்களை, பார்க்கின்- (ஆராய்ந்து) பார்த்தால், சுற்றம்- உறவாவோர், இல்லை- (ஒருவரும்) இல்லை.

*19. கூர் அம்பாயினும் வீரியம் பேசேல்.*

ப-ரை. கூர் அம்பு ஆயினும்- (உன் கையிலிருக்கிறது) கூர்மை பொருந்திய அம்பானாலும், வீரியம்- வீரத் தன்மையை, பேசேல்- (நீ வீணாகப்) பேசாதே.

*20. கெடுவது செய்யின் விடுவது கருமம்.*

ப-ரை. கெடுவது- கெடுவதை, செய்யின்- (தன் சினேகன்) செய்தால், விடுவது- (அவன் சினேகத்தை) விடுவதே, கருமம்- (விவேகிக்கு) நற்செய்கையாம்.

*21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.*

ப-ரை. கேட்டில்- (கைப்பொருள்) இழந்த காலத்தில், உறுதி- மனந் தளராமை, உடைமை- ((முன்போல் அப்) பொருளுடையனாந் தன்மையை, கூட்டும்- சேர்க்கும்.

*22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.*

ப-ரை. கைப்பொருள் தன்னின்- கையிலிருக்கிற பொருளைப் பார்க்கிலும், மெய்ப்பொருள்- மெய்ப்பொருளாவது, கல்வி- கல்வியேயாம்.

*23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி.*

ப-ரை. கொற்றவன்- அரசனானவன், அறிதல்- (ஒருவனை) அறிந்திருத்தல், உற்ற இடத்து- (அவனுக்கு ஆபத்து) வந்த இடத்து, உதவி- உதவியாகும்.

*24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.*

ப-ரை. கோட்செவி- கோள் கேட்குங் குணத்தோனுடைய காதிலே, குறளை- (பிறர்மேல் ஒருவன் வந்து சொன்ன) கோளானது, காற்றுடன் சேர்ந்த நெருப்பு- நெருப்பைப் போல மூளும்.

(தொடரும்...

உ

# வேண்டுதல்கள்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

வேங்கடவனை வணங்கி வாழ்த்திப் பாடி அவனடியாராய்த் திகழ்ந்த குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழி நம்மை மெய்மறக்கச் செய்யும் பாடல்களைக் கொண்டது. அரங்கனை வழிபட்டு வாழவேண்டுமென்ற பேரவாவை அவர் அந்தப் பாடல்களிலே புலப்படுத்தி உள்ளார்.

வேங்கடவன் வீற்றிருக்கும் திருவேங்கடத்து ஏரியிலே குருவாகவும், மீனாகவும், அங்கொரு தம்பமாகவும், அங்கு பாயும் ஆறாயும், இருக்கவேண்டு என அவர் ஆசைப்பட்டார். அதுமட்டுமல்ல. நாம் கிடைத்தற்கரியவையெனக் கருதி இறைவனிடம் எவற்றையெல்லாம் கேட்போமோ அவையெதுவும் வேண்டாம் திருவேங்கடத்தில் இருக்கும் மேற்குறித்தவையாய் இருப்பதையே தான் வேண்டுகிறேன் என அவர் வேண்டிநிற்பதை இப்பாடல்களிலே தரிசித்து வியக்கலாம். உதாரணமாக ஒரு பாடலைப் பார்ப்போம்.

**ஆனாதசெல்வத் தரம்பையர்கள் தற்சூழ**
**வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்**
**தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்**
**மீனாய்ப்பிறக்கும் விதியுடையே னாவேனே.**

என்ற பாடலில் பூமியை ஆளும் அரசபதவிமட்டுமல்ல தேவலோகத்தை ஆளும் பதவி கூடவேண்டாம். திருவேங்கடச்சுனையில் மீனாய்ப் பிறக்க வேண்டுமென ஆசைப்படுகிறார். ஒருகுளி நிலத்திற்கு அதிபதியாக நாம் படும்பாடு! இவர் வானாளும் செல்வமே வேண்டாமென்கிறார். மண்ணும் செல்வமும் மட்டுமல்ல அரம்பையர்கள்கூட வேண்டாமென்றுவிட்டார். ஊர்வசியுடன் இன்பம் அனுபவித்து தேவருலகை ஒருகுடைக்கீழ் ஆள்வதை விட திருவேங்கடமலைமேல் ஏதேனுமானால் போதுமென அவர் வேண்டிப் பாடிய பாடல் வருமாறு.

**உம்பருலகாண் டொருகுடைக்கீழ் உருப்பசிதன்**
**அம்பொற்கலையல்குல் பெற்றாலு மாதரியேன்**
**செம்பவளவாயான் திருவேங்கட மென்னும்**
**எம்பெருமான் பொன்மலைமே லேதேனுமாவேனே.**

இவ்வாறு குலசேகரப்பெருமாள் பாடுவதைப் பார்க்கும் போது இவருக்கென்ன பித்துப்பிடித்துவிட்டதோ என எமக்குள் ஓரெண்ணம் ஏற்படுகிறதல்லவா? இப்படித்தான் நாம். எமக்குப் பித்துப் பிடித்திருந்தாலும் அதை ஒப்புக்கொள்ள மாட்டோம். மற்றொருவர் சற்று அப்படியிப்படி இருந்தால்ப் போதும் அவர் ஒரு மாதிரி என்று உடனே கூறிவிடுவோம் ஆனால் குலசேகரப்பெருமாள் எம்மைப்போன்றவரல்ல. அவர்

தனக்குப் பித்துப்பிடித்திருப்பதாகக் கூறுகிறார். "நான் இந்த உலகத்தவரோடு கூடுவதில்லை. நான் அரங்கநகர் எம்பெருமானுக்குப் பித்தனே" என்கிறார். மாலவனில் மையல் கொண்டு பித்தனாகி விட்டார்.

**"மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் இவ்**
**வையந்தன்னொடும் கூடுவதில்லையான்"**

என இந்தப் பொய் வாழ்க்கையை மெய்யெனக் கருதும் உலகத்தோடு நான் சேர்வதில்லை என்று உலகுடன் சேராததன் காரணத்தைக் கூறுவார். அப்படி இந்த உலகுடன் சேராத நான் ஒரு பித்தன். மாலவனில் பித்துக்கொண்டவன் என்பார்.

**உண்டியேயுடையே யுகந்தோடும் இம்**
**மண்டலத்தொடும் கூடுவதில்லையான்,**
**அண்டவாண னரங்கன் வன்பேய்முலை**
**உண்டவாயன்ற னுன்மத்தன் காண்மினே.**

என்ற பாடலை எடுத்துக் கொண்டால் இந்த உலகத்தவருக்கு உவப்பானது என்ன? உணவு உடை போன்றவையே. இவற்றை விரும்பி அதற்காக ஓடுகின்ற இந்த உலகுடன் நான் சேர்வதில்லை, நான் அரங்கனின் உன்மத்தன் அதாவது அவனது பித்தன் எனப்பாடி உள்ளார். இவ்வாறு பாடிய பாடல்களுள் ஒன்றிலே "அரங்கநகர் எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே" எனப்பாடியுள்ளதிலிருந்து மாணிக்கவாசகர் ஏழேழ் 'பிறவிக்கும் உமக்கே நாம் ஆட்செய்வோம்' எனப்பாடியது போல் தொடரும் பிறவிகள் தோறும் அரங்கனுக்கே பித்தனாயிருப்பேன் என இருவரும் உறுதிகொண்டிருந்தது புலப்படுகிறது.

தான் அரங்கனின் பித்தனென்று பாடல்களைப் பாடியவர் இறுதியிலே "இதைப்பேசி என்ன பயன்? எனக்கு எல்லோரும் பேயராகத் தோன்றுகிறார்கள். எல்லோருக்கும் நான் ஒரு பேயனாகத் தெரிகின்றேன். ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன். எம்பிரானுக்கே பேயனாகி விட்டேன்" என்பார்.

**பேயரே யெனக்குயாவரும், யானுமோர்**
**பேயனேயெவர்க்கும் இது பேசியென்**
**ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்**
**பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே**

என்பது அவரது திருமொழி சிந்தித்துப்பாருங்கள். மெய்யறிவு பெற்றவர் எமது கண்களுக்குப் பைத்தியக்காரனாகத் தோன்றுவது வழமை. இன்று நாம் போற்றி வணங்கும் பலரை, அவர்களது சமகாலத்தவர் அப்படித்தான் கருதியிருக்கிறார்கள். மெஞ்ஞானிக்கு உலகத்தவர் பைத்தியக்காரராகத் தெரிவார்கள். இதை அவர் மேற்காட்டிய பாடலிலே அழகாகக் கூறியுள்ளார். இவ்வாறு அரங்கன் மேற்கொண்ட பித்தின் காரணமாகவே அவரது வேண்டுதல்கள் எமது வேண்டுதல்களை விட வேறுபட்டவையாக அமைந்தன.

எமது வினை எம்மை வருத்தும் போது நாம் இறைவன் எம்மை வருத்து வதாக எண்ணி அவனை நோவது மட்டு மல்ல வைவதுமுண்டு. ஆனால் இறைவன் தனக்கு மீளாத்துயர் தரினும் உன்ன ருளையே அடியேன் பார்ப்பேன். உனக்கே ஆளாயிருப்பேனென குலசேகரப்பெருமாள் பாடியுள்ளார். அதற்குக் காரணம் கூறுவது எமக்கு நன்கு விளங்கும் வகையில் அமைந்துள்ளது.

நமக்கு ஒரு நோய் வந்துவிட்டது. அதைத்தீர்க்கச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென மருத்துவர் தீர்மானிக்கிறார். கத்தியால் வெட்டி, ஊசியால் தைத்து, அவர் செய்யும் சத்திர சிகிச்சையால் வேத னைப்பட்டாலும் மருத்துவரை நாம் வெறுப்பதில்லை. நோய் தீர்ந்ததும் மருத்துவரை நாம் 'கண்கண்ட தெய்வம்' என்கிறோம். நோயாளி மருத்துவனை விரும்புவது போன்று தான் நானும் உன்னை விரும்பி உனது அருளை வேண்டுகிறேன் என அவர் பாடியுள்ளது நாம் மனங்கொள்ளவேண்டிய ஒன்றாகும். இறைவன் மீளாத்துயர் தருவது மாயத் தால் எனக்கூறுவது மேலும் நயக்கத் தக்கது. பாடல் வருமாறு.

**வாளாலறுத்துச் சுழனும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல், மாயத்தால்**
**மீளாத்துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா, நீ**
**ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே.**

இனி வருங்காலத்தில் எவ்வளவு துயர்வரினும் நாமும் இறைவனது அருளை நம்பி அதை வேண்டி நிற்க வேண்டும். இப்படியெல்லாம் வேண்டிய குலசேகரப்பெருமான் மிகப்பெரிதாக ஒன்றையும் வேண்டியுள்ளார்.

மேற்காட்டிய திருமொழியைத் தொடர்ந்து வரும் பாடல்களுள் ஒன்றி லேயே அந்த வேண்டு தல் வருகிறது. ஆம். அவர் இறைவனையே வேண்டி நிற்கிறார். அந்தப்பாடலைப்பாடி நாமும் அவனை வேண்டி நிற்போமா?

**நின்னையேதான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்**
**தன்னையே, தான்வேண்டும் செல்வம் போல் மாயத்தால்**
**மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட்டம்மா**
**நின்னையேதான் வேண்டி நிற்பனடியேனே.**

## குடும்ப விருட்சம்

பலப்பல பறவைகளுக்கும், மனிதர்களுக்கும் நிழல் தந்து உறைவிடமாக இருப்பது மரம். குடும்பம் என்பது ஒரு மரத்தைப் போன்றது. அதன் வேர் மனைவி, அடிமரம், கணவன், கிளைகள் மக்கள், இலைகள் அன்பு, மலர்கள் கருணை, பழங்கள் தருமம். மரத்தைப் போலவே இல்லறத்தில் உள்ளவனும் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் பிறருக்கு நன்மையே செய்ய வேண்டும்.

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவை

## 18. குளித்துப் பூசி

**நீராடிக் கால்கழுவி வாய் பூசி மண்டலம் செய்து**
**உண்டாரே உண்டார் எனப்படுவார் அல்லாதார்**
**உண்டார்போல் வாய்பூசிச் செல்வர் அதுஎடுத்துக்**
**கொண்டார் அரக்கர் குறித்து.**

நீரிலே குளித்துக், கால் கை, வாய் கழுவி, உணவு உண்ணும் இலை, அல்லது கலத்தைச் சுற்றி வட்டமாக நீர் தெளித்து; (அப்போதுதான் எறும்பு முதலியன உண்ணும் உணவோடு வந்து கலந்திடாது) உண்பவர்களே, உண்மையில் உணவு உண்டவர்கள், என்று சொல்லத்தக்கவர்கள். இப்படிச் செய்யாமல் உண்டவர்கள், உண்டவர்போல், வாய்கழுவிச் சென்றவர்களே தவிர; அவர்கள் உணவை; அவர்கள் உண்ணவில்லை; அரக்கர்கள் உண்டனர் என்றே, கொள்ளவேண்டும்.

பூசி- கழுவி; மண்டலம்- வட்டம்; அரக்கர்- அசுரர், பூதம்.

## 19. ஈரக் காலோடு ஏறாதீர்படுக்கை

**காலின்நீர் நீங்காமை உண்டிடுக பள்ளியும்**
**ஈரம் புலராமை ஏறற்க என்பதே**
**பேரறிவாளர் துணிவு.**

கால், கை கழுவிய ஈரம் காயும் முன்பாகவே, உணவு உட்கொண்டு விடவேண்டும். கால் கழுவிய ஈரம் காயும் முன்பாக படுக்கையில் ஏறக்கூடாது. கை ஈரம் காயும் முன்பு சாப்பிட்டுவிடவேண்டும். ஈரக்காலோடு படுக்கப் போகக் கூடாது. இதுவே அறிவுடைய பெரியோர் அறிந்து சொன்ன முடிவாகும். ஈரக் காலால் படுக்கை அழுக்காகி விடும். ஈரக்கை உலர்ந்தால் அழுக்கு சேர்ந்துவிடும் என்பது கருத்து.

புலர்தல்- காய்ந்துபோதல்.

## 20. கிழக்குப் பார்த்து உண்க

**உண்ணுங்கால் நோக்கும் திசை கிழக்குக் கண்ணமர்ந்து**
**தூங்கான் துளங்காமை நன்கு இரீஇ யாண்டும்**
**பிறிதி யாதும் நோக்கான் உரையான் தொழுது கொண்டு**
**உண்க உகாஅமை நன்கு**

உணவை எப்படி உண்பது? கிழக்குப் பார்த்து உட்கார்ந்து உண்ணவேண்டும். தூங்கி விழாமல், ஆடாமல் அசையாமல், நன்கு அமர்ந்த நிலையில்; சுற்றி வேடிக்கை பார்க்காமல், வெட்டி அரட்டை அடிக்காமல்; உண்ணும் உணவை வணங்கி, மகிழ்ந்து சிந்தாமல் எடுத்து உண்பதே சிறப்பு.

துளங்குதல்- அசைதல்; இரீஇ- இருந்து.

## 21. உண்ணச் செய்து உண்க

**விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை**
**இவர்க்கு ஊண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்**
**ஒழுக்கம் பிழையாதவர்.**

வந்திருக்கும் விருந்தினர், வயதில் முதிர்ந்தவர்கள், பசு மாடு, பறவைகள் (காகம்) இவர்களுக்கு, உணவு உண்ணத் தராமல்; உணவு உட்கொள்ள மாட்டார்கள் ஒழுக்கம் தவறாத உயர்குடிச் சான்றோர்.

சிறை- பறவை; ஊண்- உணவு; பிழையாதவர்- தவறாதவர்.

## 22. இருக்கும் இடமே சுகம்

**ஒழித்த திசையும் வழிமுறையால் நல்ல**
**முகட்டு வழிஊண் புகழ்ந்தார் இகழ்ந்தார்**
**முகட்டு வழிகட்டில் பாடு.**

கிழக்குத் திசைபார்த்து இருந்து, உணவு உட்கொள்வது நல்லதுதான். அப்படி முடியாது போகிறபோது மற்ற திசைகளும் நல்லதுதான். எனவே வசதிப்படி அமைந்த திசை பார்த்து உண்ணுவது நடைமுறைக்கு ஏற்ற நல்ல பழக்கந்தான். வாயில்படியில் இருந்துகொண்டு உண்பது நல்லது எனக் கூறுவர். சிலர் வாயில் படிக்கு நேராகக் கட்டிலைப் போட்டுப் படுப்பது தவறு என்று இகழ்ந்துரைப்பர். (நல்லதும் கெட்டதும் இருக்கும் இடவசதியைப் பொறுத்துத்தானே)

முகட்டுவழி- வாசல்படி

## 23. கட்டிலில் கண்ட இடத்தில் உண்ணாதே.

**கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார்**
**சிறந்து மிக உண்ணார் கட்டில்மேல் உண்ணார்**
**இறந்தொன்றும் தின்னற்க நின்று.**


படுக்கையில் இருந்தபடியோ, நின்றபடியோ, வெட்டவெளியிடத்திலோ, அளவுக்கு அதிகமாகவோ, கட்டில்மேல் இருந்தோ உணவு உட்கொள்ள மாட்டார்கள் உயர்ந்தோர். உண்ணும் வழிமுறை தவறி, உண்ணக் கூடாததையும் உண்ணாமல் இருப்பதே நன்மை பயக்கும்.

கிடந்து- படுத்து; வெள்ளிடை- வெளியிடம்; இறந்து- நெறிதவறி.

(தொடரும்...

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின் வட இந்திய ஸ்தலயாத்திரை



**காலம்: 28-07-08 திங்கள் மாலை 3.00 மணி**

**இடம்: காசியிலிருந்து அலகாபாத் நோக்கிய பயணம்**

காசியின் கடை வீதிகளில் அவரவருக்கு பிடித்தமானவற்றை வாங்குவதில் பகல்ப் பொழுது கழிந்து போக மாலை 3.00 மணிக்கு அலகாபாத் நோக்கி ரயிலில் எமது பயணம் ஆரம்பமானது. இரவு 8 மணிக்கு அலகாபாத் சென்றடைந்து விடுதியில் தங்கி பூரணமாக ஓய்வெடுத்துக்கொண்டோம்.

**காலம்: 29-07-08 செவ்வாய் காலை 7.00 மணி**

**இடம்: அலகாபாத்**

கங்கைக் கரையில் காணப்படும் "பிரயாகை" எனப்படுகின்ற புண்ணிய ஸ்தலமே இன்று "அலகாபாத்" என அழைக்கப்படுகிறது. இங்கே தான் கங்கை ஜமுனையுடன் கலக்கும் "திரிவேணி சங்கமம்" உள்ளது. கங்கை ஜமுனை தவிர சரஸ்வதி நதி அந்தர் வாஹினியாக (நிலத்துக்கு கீழாக)

ஓடுகிறாள். ஆண்டு முழுவதும் கங்கைக்கு திரு.விழாதான். கங்கை வெண்மையாகவும், ஜமுனை கருநீலநிறத்திலும் தனித்தனியாக வந்து கலப்பதை நாம் தெளிவாகவே பார்க்கலாம். மூன்று நதிகளும் கலக்கும் திரிவேணி சங்கமத்தில் நீராடுவது என்பது பிறந்ததன் பிறவிப்பயனாகும். புகழ் பெற்ற இத் திரிவேணி சங்கமத்தில் வான்மீகி, காளிதாசர், ஆதிசங்கரர், இராமானுஜர் போன்ற மகான்கள் பலரும் வந்து நீராடியுள்ளார்கள்.

மிதந்து செல்லும் சிறிய படகுகள் மூலம், கரையிலிருந்து 0.5 கி.மீ தூரத்திலுள்ள பலகையினால் ஆக்கப்பட்ட மேடையில் பலரும் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவார்கள். இடுப்பளவு நீரில் இறங்கி நீராடியபின் மேடையில் பிதிர்க் காரியங்கள் நடைபெறுகின்றன. இங்கிருந்து தொன்னையில் ஒருவகை இலையில் கிண்ணம் போன்று செய்யப்பட்டது) விளக்குகளை ஏற்றி கங்கையில் விடுவார்கள்.

புதுமணத் தம்பதியரும், புனித நீராட வரும் தம்பதியரும் இங்கே பூசை செய்வதைப் பெரும் பேறாகக் கருதுகின்றனர். இந்தப் பூஜையின் ஒரு பகுதியாக கணவன்மார்கள் மனைவியருக்கு கூந்தலைப் பின்னிவிடுவது விநோதமான காட்சியாகும்.

பிரயாகையில்த் தான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பமேளா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. லட்சக் கணக்கில் பக்தர்களும், சந்நியாசிகளும், சாதுக்களும் நீராடும் "கும்பமேளா" அற்புதமான விழாவாகும். நதிகள் சங்கமிக்கும் இடத்து கரையில் சிறியதொரு கோட்டையும், கோட்டையின் உள்ளே பாதாள காளி கோயிலும் உண்டு. கோட்டை அருகே ஆஞ்சநேயர் சயனித்தவண்ணம் உள்ள கோயிலும் காஞ்சி காமகோடி பீடத்தினால் உருவாக்கப்பட்ட ஆலயமும் அமைந்துள்ளன.

மாலையில் இந்தியாவின் முதற் பிரதமர் பண்டித நேருவின் இல்லமான "ஆனந்த பவனம்" பார்க்கச் சென்றோம். ஆனந்த பவனம் பெரிய அலங்காரமான வீடு. அரசின் சொத்துடைமை ஆக்கப்பட்ட பின்னர் அதனை அரசே பராபரிக் கிறது. நேருவுடன் காந்திஜி தங்கியிருந்த இடமும், காந்திஜி பாவித்த பொருட்களும் அப்படியே உள்ளன. அதேபோல நேருஜியின் அறையில் அவர் பாவித்த அத்தனை பொருட்களையும் காட்சிக்கு வைத்துள்ளார்கள். சாதாரணமான பார்வைக்குத் தெரியாத படி உள்ள ஒரு ஒடுக்கான வாசல் ஊடாக உள்ள படிக்கட்டுக்கள் கீழே ஒரு பரந்த மண்டபத்தில் முடிகின்றன. அதுதான் பிரிட்டிஸார் காலத்தில் காந்திஜி, நேருஜி உட்பட காங்கிரஸ் தலைவர்கள் சுதந்திர போராட்ட காலத்தில் ரகசியமாக சந்தித்து ஆலோசனை செய்யும் இடமாகப் பாவிக்கப்பட்டது. ஆனந்த பவனத்தை முழுமையாகப் பார்வையிட்டதன் பின்னர் அண்மையில் உள்ள பரத்துவாய முனிவர் வசித்த ஆச்சிரமத்தைப் பார்வையிடலாம். அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் நிறைவடைந்து ஹரித்துவார் நோக்கி எமது பஸ் பயணம் தொடர்ந்தது.

**காலம் : 30-07-08 புதன் காலை 10 மணி**

**இடம் : ஹரித்துவார்**

நீண்ட பயணத்தின் பின்னர் பகல் 11 மணிக்கு ஹரித்துவார் சென்றடைந்தோம். இறைவனை அடைவதற்கு ஒரு நுழைவாயிலாக ஹரித்துவார் பற்றிச் சொல்கிறார்கள். இரு புறமும் உள்ள மலைத் தொடர்களுக்கு நடுவே கங்கை ஓடி வருகிறது. அங்கு நீராடும் புண்ணிய இடம் "பிரம்ம குண்டம்" எனப்படுகிறது. இங்கும் இலைத் தட்டில் தீபமேற்றி கங்கையில் மிதந்து செல்ல விட்டு வழிபாடு செய்கிறார்கள். இந்த இடத்தைச் சுற்றிப் பல கோயில்கள் உள்ளன. கங்கை புனித நதியில் நாமும் நீராடினோம்.

ஹரித்துவாரின் இரு புறத்திலும் இரண்டு குன்றுகள் உள்ளன. அவற்றில் ஒரு குன்றின் மீது மானசாதேவி கோயிலும், மற்றக் குன்றின் மீது சண்டி தேவி கோயிலும் உள்ளன. மலை மீதுள்ள மானசாதேவி கோயிலுக்குச் செல்ல தடித்தகம்பி மீது செல்லும் ஊஞ்சல் வண்டியைப் பயன்படுத்துகிறார்கள். இதில் செல்லும் போது ஹரித்துவார் முழுவதுமுள்ள ரம்மியமான காட்சிகளையும் பார்த்து ரசிக்க முடிகிறது.

மானசாதேவி என்பது சக்தியின் வடிவம். இந்த விக்கிரகத்தில் உமை, மகாலட்சுமி, சரஸ்வதி மூவரும் மூன்று முகங்களுடன் ஒரே வடிவமாக அமைந்திருப்பதைக் காணலாம். அந்த சக்தியின் வடிவத்தை நாமும் கைதொழுது வணங்கி நின்றோம். இரவு 7.00 மணிக்கு வழமையாக நடைபெறும் கங்கைப் பூஜையில் நாமும் கலந்து கொண்ட பின் இரவு பூரண ஓய்வு கொண்டோம்.

(தொடரும்...

## தாழம்பூ பூஜைக்கு எடுக்காதது ஏன்?

*தாழம்பூவை பூஜைக்கு எடுக்க வேண்டாம் என்று யாராவது கூறினால் நாம் சந்தேகக்கண்களுடன் தான் பார்ப்போம். ஏனென்றால் தூய்மையும் அழகும் நறுமணமும் மிகுந்ததோர் மலரே தாழம்பூ. இதைப் பூஜைக்கு எடுக்கக் கூடாதென்பதன் பின்னால் சில காரணங்களுண்டு. ஒரு பழைய கதையில் தாழம்பூ பொய் சாட்சி கூறினதாகவும் அதற்கான தண்டனை அனுபவிக்கின்றது என்றும் கூறுவது நிஜத்துக்கொவ்வாது.*

*தாழம்பூவை விரிவாக சோதனை செய்ததில் அதில் எதிர்மறை விசைகள் செயல்படுவதாகத் தெரிய வந்தது. இந்த அழகான பூவை பூஜைக்கு எடுக்காததன் காரணம் இதுவே.*

சுயமரியாதை இல்லாமல் வாழ்வதும் வாழ நினைப்பதும் மிகப் பெரிய அவமானமாகும்

# சங்கற்பம் செய்தல்

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள்**

"தன்மேமன: சிவசங்கல்ப மஸ்து" என்பது ஒரு வேதவசனம், சுபவிடயங் களையே மனது சிந்திக்கட்டும் அல்லது கற்பிக்கட்டும் (கற்பனை பண்ணட்டும்) என் பதே இவ்வசனத்தின் கருத்து என ரிஷி கேசம் சிவானந்தர் குறிப்பிட்டிருக்கிறார். இங்கே சங்கல்பமென்பதற்கு சிந்திக்கட் டும் அல்ல கற்பனை பண்ணட்டும் என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. கற்பனை பண் ணல் அல்லது கற்பித்தல் என்றால் கரு திக் கொண்டிருத்தல் என்பதே பொருத்த மாகும்.

ஆலயங்களில் நாம் சங்கற்பம் செய்தல் என்பதற்கு இவ்விளக்கம் திருப் திகரமானதாகும்.

ஆலயத்தில் ஒரு கிரியையைச் செய்யும் பொழுது இன்னநோக்கத்துக்காக இக்கருமத்தை இந்த நேரத்தில் இன்ன முறைப்படி செய்கிறேன் எனத் தன் மனத்தில் உறுதிப்படல் - தெளிவு கொள் ளுதல் ஆசாரிய சங்கற்பமாகும்.

உபயகாரரும் இக்கருமத்தை இன்னநோக்கத்துக்காக இந்த ஆசாரியார் செய்யும்படி நான் கர்த்தாவாக இருக் கிறேன் என்று சங்கற்பிப்பார்.

இப்படி இருவரும் சங்கற்பித்த லால் அக்கருமத்துள் வேறு விருப்பங்கள், செயல்முறைகள், முயற்சிகள் குறுக் கிடாது இருக்கும். அப்படிக் குறுக்கிட்டு கரு மத்தை உறுதியற்றதாக்கக் கூடாது என் பதற்காகவே சங்கற்பம் செய்து கிரி யைகளைச் செய்யவேண்டும் என சாஸ் திரங்கள் விதித்துள்ளன.

இப்படிச் சங்கற்பம் செய்தவர் அச்சங்கற்பத்துக்கு மாறாகச் செயற்படக் கூடாது. செயற்பட்டால் தன் நெஞ்சு அறி யப் பொய் சொன்ன - தவறுசெய்த பாபத்துக்கு ஆளாதல் தெளிவு.

உலக வழக்கில் கையெழுத்து இடுதல் - அதனையும் சாட்சிகள் முன் இடுதல். முத்திரையில் கையெழுத்து இடு தல் என்பதும் நீதிமன்றத்தில் சத்தி யப்பிரமாணம் செய்தல் என்பதும் போலச் சமயக்கிரியைகளில் சங்கற்பம் இடம் பெறும். சாட்சிகள் முத்திரை என்பன போலச் சங்கற்பத்தில் பவித்திரம் அணிதல் விநாயக வணக்கம் செய்தல் கையில் மலர் தருப்பைபோன்றவற்றை வைத்துக் கொண்டு சங்கற்பவணங்களைக் கூறல் என் பன உள்ளன. இப்படிச் சங்கற்பம் செய் தவர் அக்கருமம் நிறைவுறும் வரையில் சங்கற்பத்துள் இடம்பெறாத சொல் செயல் நினைவு என்பனவற்றில் ஈடுபடல் தவறு என்பதும் வெளிப்படை.

நான் பஸ்ஸில் 4 மணிக்கு பிரயாணம் செய்யவுள்ளேன் கடைக்குப் போகிறேன். நாளை அதிகாலை நித்திரையினின்றும் விழிப்பேன் என்பவற்றை உறுதிப்படுத்தயாரும் கையெழுத்திடுதலோ சாட்சி வைத்தலோ வழக்கம் இல்லை. ஒரு பெறுமதியான செய லுக்கே சாட்சி கையெழுத்து எல்லாம். இதேபோல சமயக்கிரியைகளிலும் வலம் வருதல், வணங்குதல், சாதாரண அர்ச்சனை என்பவற்றுக்கு சங்கற்பம் தேவையில்லை. இக்காலத்தில் சாதாரண அர்ச்சனைக்கு சங் கற்பம் செய்யும் நடைமுறை உண்டாகி

இருக்கிறது. சங்கற்பமின்றி அர்ச்சனை செய்தல் வீண் என்ற கருத்தும் உண்டாகியிருக்கிறது. பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்யாவிட்டால் உரியவருக்குப் பயன் கிடைக்காது என்றும் கருதுகிறார்கள்.

பலர் ஆலய வழிபாட்டுக்கு மலர், பால், தயிர், இளநீர், நெல்லு போன்றவற்றை வழங்குகின்றனர். இப்படி வழங்குபவர் சங்கற்பம் செய்யாதபடியால் அவர்களுக்கு இறையருள் கிடைத்துப் போகுமா? சங்கற்பம் செய்யாவிட்டாலும் அவர்களுக்கு உரிய புண்ணியம் கிடைக்கும் என்பதாலேயே இப்படிக் கொடுக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

திருவாதவூரடிகள் புராணத்தில் 'ஆம் பொருள் நமதேயானால் அறம் பிறர்க்காவதுண்டோ" என ஒரு வசனம் உண்டு. குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளால் வாதவூரர் புண்ணியச் செயல்களைச் செய்திருந்தால் அப்புண்ணியம் பொருளுக்கு உரியவனான தனக்கே வரும் என அரசன் கூறுவதாகவே வாதவூரடிகள் புராணத்தில் இவ்வசனம் உள்ளது.

குசேலர் வறுமையுற்ற நிலையில் தன் பால்யநண்பனாகிய கண்ணபிரானைச் சந்திக்கிறார். கண்ணனும் நட்புரிமை பாராட்டினான். குசேலனோ தன் வறுமையைத் தீர்க்க உதவும்படி கேட்கவில்லை. ஆனால் கண்ணன் குசேலர் வறுமையைப் போக்கியதாக வரலாறு உள்ளது.

எனவே நம் சமய நூல்கள் விதித்த பெரிய கருமங்களைச் செய்யும்போது சங்கற்பம் செய்யவேண்டுமே அன்றி பலருக்காக நீண்டநேரம் சங்கற்பம் சொல்லுதலும் சங்கற்பத்திலும் மிகக் குறைந்த நேரம் அர்ச்சனை செய்தலும் என்னும் நவீன வழக்கம் விவேகத்தும் அறிவுக்கும் பொருந்தாத நடைமுறையாக உள்ளது. சங்கற்ப விதிகளில் இன்னகிரியைக்கு இன்ன பயன் எனச் சங்கற்பிக்க வேண்டும் என்று கூட இருக்கும். சாதாரண செயலுக்குப் பெரும்பயனைச் சங்கற்பிக்கும் முறை பெருந்தவறானதேயாகும்.




10.07.2009 அன்று இடம்பெற்ற அருணகிரிநாத சுவாமி விழாவின் போது நடைபெற்ற தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களின் வில்லிசை நிகழ்வு

பணிவு என்பது தாழ்மையின் சின்னம் அல்ல அது உயர்ந்த பண்பின் அறிகுறி

உ

# 2009ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு

## உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| K.V. துரைசாமி | மயிலிட்டி | 1000. 00 |
| கார்த்திகேசு நினைவாக கார்த்திகேசு குடும்பம் | இமையாணன் | 5000. 00 |
| பா. ஜாதவன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| சோதிமுத்து சின்னத்துரை மகாத்மா வீதி | நெல்லியடி | 1000. 00 |
| N. சுந்தரம் மருந்துக்கடை | திருநெல்வேலி | 2000. 00 |
| மு. இராசேந்திரம் | புலோலி | 2000. 00 |
| குணசிங்கம் ஜெனார்த்தன் | உரும்பராய் | 1000. 00 |
| குணசிங்கம் சுபா | உரும்பராய் | 1000. 00 |
| N. திரவியம் | புலோலி | 2000. 00 |
| திருமதி. கலாயினி பார்த்தீபன் பாமன்கடை, | வெள்ளவத்தை | 2000. 00 |
| சின்னத்துரை பூபதி | உரும்பராய் | 1000. 00 |
| அ.தேவகுமார் கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. சிவலிங்கராஜா பேராசிரியர் | யாழ்பல்கலைக்கழகம | 1000. 00 |
| தி.தவபாக்கியராசா அச்சுவேலி தெற்கு | | ஒரு மூடை சம்பா அரிசி |
| க.மகேந்திரன் ஆசிரியர் வீதி | சங்கத்தானை | 1000. 00 |
| பொ. சந்திரமோகன் | ஒசன்ட் றேட்ஸ் யாழ்ப்பாணம் | 4000 .00 |
| Dr. R. பாக்கியநாதன் | கல்வியங்காடு | 1000. 00 |
| சி. நடேசமூர்த்தி J.P. பிரசாத் | அச்சுவேலி | 3000. 00 |
| செல்வி. T. பெரியதம்பி | பருத்தித்துறை | 1000. 00 |
| க.கணேசலிங்கம் | கொழும்பு | 2000. 00 |
| K.S. கணபதிப்பிள்ளை செல்வபதி | கைதடி | 1000. 00 |
| க.தவேந்திரன் மருத்துவபீடம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| தம்பையா கணபதிப்பிள்ளை சாயி இல்லம் | புட்டளை பருத்தித்துறை | 10000. 00 |
| மா.சுகிர்தா சிறுப்பிட்டி மேற்கு | நீர்வேலி | 3000. 00 |
| A. முகுந்தன் வெள்ளவத்தை | கொழும்பு | 5000. 00 |
| R. சந்திரகுமார் | கொடிகாமம் | 5000. 00 |
| கந்தையா குலகுணேஸ்வரி கந்தரோடை | சுண்ணாகம் 1மூடை அரிசி, | 2000. 00 |
| K. கருணாநிதி சாமியன் அரசடி | கரவெட்டி | 3000. 00 |
| அமரர் கமலேஸ்வரி கிருஸ்ணசாமி நினைவாக | வியாபாரிமூலை | 2000. 00 |
| குமாரசாமி குடும்பம் பத்தமேனி | அச்சுவேலி | 1000. 00 |
| திருநாவுக்கரசு சந்திரராணி | வவுனியா | 10000. 00 |
| க.முத்துக்குமாரசாமி உடுவில் | சுண்ணாகம் | 2000. 00 |

வாழ்க்கை என்பது ஏதேனும் ஒன்றை உறுதியாகச் செய்துமுடிப்பதன் மூலமே அர்த்தம் பெறுகிறது

| | | |
|---|---|---|
| க. தியாகராஜா P.M. | கந்தர்டம் | 2500. 00 |
| யோகநாதன் வேலழகி | மானிப்பாய் | 500. 00 |
| மூத்ததம்பி கந்தையா | சுண்டிக்குளம் | 01 மூடை அரிசி |
| செ. சுனித்தா கொக்குவில் மேற்கு | கொக்குவில் | 2000. 00 |
| Dr. ஸ்ரீராஜேஸ்வரன் குடும்பம் பலாலி வீதி | திருநெல்வேலி | 2000. 00 |
| திரு. ரவிசங்கர் சுகன்ஜா குடும்பம் | சுவிஸ் | 3000. 00 |
| பாஸ்கரசுந்தரம் குடும்பம் தெஹிவளை | கொழும்பு | 2000. 00 |
| இரத்தினசிங்கம் குடும்பம் | கரவெட்டி | 2000. 00 |
| ஆ. சந்திரகுமார் | சிறுப்பிட்டி | 1100. 00 |
| சி. பொன்னம்மா கரணவாய் தெற்கு | கரவெட்டி | 1000. 00 |
| சி. தங்கராஜா | ஆவரங்கால் | 1000. 00 |
| க. நவரத்தினம் ஆசிரியர் நெல்லியடி | கரவெட்டி | 1000. 00 |
| பொ. வியாகேஸ் பீக்கோன் கல்வி நிறுவனம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| அமரர் பொன்னையா கந்தசாமி நினைவாக திருமதி உமாதேவி கந்தசாமி | கனடா | 2000. 00 |
| திருநாவுக்கரசு ஞானானந்தன் இணுவில் வீதி | மானிப்பாய் | 1000. 00 |
| சுவாமியம்மா விமலா திருப்பதி ஆச்சிரமம் | தெல்லிப்பளை | 200. 00 அரிசி, பொருட்கள் |
| இரதினி இரட்ணராஜா K.K.S. வீதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. செல்வரட்ணம் இலண்டன் செ. பாலச்சந்திரன் மூலம் | | 5000. 00 |
| S. கிருஷ்ணபிள்ளை | பிரான்ஸ் | 5000. 00 |
| ஆ. ஞானகௌரி சிறுப்பிட்டி வடக்கு | நீர்வேலி | 3000. 00 |
| திரு. மாதவன் | சண்டிலிப்பாய் | 500. 00 |
| சி. விதுசனசர்மா கோவில் வீதி | நல்லூர் | 1000. 00 |
| பு. சுமங்கலி அளவெட்டி வடக்கு | அளவெட்டி | 500. 00 |
| A. குமாரசாமி | நல்லூர் | 500. 00 |
| மகேஷ்வரன் மயூர்கரன் | நெல்லியடி | 10,000. 00 |
| சி. சுவர்ணா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| A. தில்லைநாதன் உருத்திரா மாவத்தை | வெள்ளவத்தை | 5000. 00 |
| T. கந்தசாமி சிவன் வீதி | ஆவரங்கால் | 3000. 00 |
| S. கமலாதேவி | பிரான்ஸ் | 20 யூரோ |
| க. நாகேஷ்வரன் பல்கலைக்கழகக் கிளை | யாழ். | 1000. 00 |
| Dr. க. சிவஞானசூரியர் | கொழும்பு | 1500. 00 |
| திருமதி ஜெயமேனன் | பருத்தித்துறை | 2000. 00 |
| Dr. T. ஸ்ரீஸ்கந்தராஜா | லண்டன் | 5000.00 |
| த. சுரேஷ்குமார் | அளவெட்டி | 1000.00 |

(தொடரும்...

அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாகச் சரிவரச் செய்வது மேல்

உ

# அமைதிக்கு வழி

**செல்வி அ. கந்தையா அவர்கள்**

எமது சகல செயற்பாடுகளுக்கும் அடித்தளமாக அமைவது எமது மனங்களே. "மனங்கொண்டது மாளிகை" என்பர். மனமானது ஒருநிலைப்பட்ட, அன்பு நிறைந்த, தன்னம்பிக்கை கொண்டதாக அமைந்துவிட்டால் எதையும் வெல்லலாம். எல்லாவற்றிலும் நல்லதைக் காணவும், நல்லதைப் பேசவும், நல்லதைக் கேட்கவும், நல்லதையே சிந்திக்கவும் மனதைப் பழக்கிவிட்டால் அது அமைதியை உண்டாக்குகின்றது. மனதில் தன்னம்பிக்கையுடன் கூடிய துணிவு வரவேண்டும். வளர்க்கவேண்டும். தன்னம்பிக்கை வாழ்வின் அத்திவாரம். நல்ல சிந்தனையால் உள்ளத்தை நிரப்பினால் அது அமைதியைக் கொடுக்கும். மனம் சுகமாய் இருந்தால் உடல் சுகமாய் இருக்கும். எதையும் தாங்கும் இதயத்தோடு மனதைத் தளரவிடாமல் துணிவே துணை என்று வாழ்ந்தால் அமைதியோடு வாழலாம். எனவே 'எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்று தேடாமல் எம் மனதை எம்வசம் வைத்திருந்தால் என்ன குறை எமக்கு? என்று கேட்கத் தோன்றும்.

மனம் ஆசைகளின் மூட்டை. அது எப்போதும் ஏதோ ஒன்றைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருக்கும். ஆசைகள்தான் மனத்தை அலைக்களிக்கின்றன. அந்த ஆசைகளைக் குறைத்தல் வேண்டும். அப்போது மனம் அமைதி அடையும். கடலில் கப்பல் இருக்கலாம். கப்பலுக்குள் கடல் இருக்கக்கூடாது. அதேபோல் மனதில் அதீத ஆசைகளை நுழையவிடக்கூடாது. மனிதனுக்கு எதிலுமே திருப்தி இல்லை. அதுவேண்டும் இதுவேண்டும் என்று எல்லாவற்றிலும் ஆசை. ஒன்று நிறைவேற இன்னொன்று. மனம் ஒருநிலைப்படாது ஓடிக்கொண்டே இருக்கும். பலர் சேர்ந்திருந்து கதைத்துக் கொண்டிருந்தாலும் கூட மனம் பல மைல்களுக்கு அப்பால் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். சலனமற்ற நீரில் பிம்பம் தெரிவதுபோல் மனமும் சலனமின்றி இருந்தால் எவ்விடயத்தையும் செய்யமுடியும். வெல்லமுடியும்.

ஆசை என்பது வெளிப்புறக் கவர்ச்சிகளால் ஏற்படுகின்ற பாதிப்பு எனலாம். நிலையற்ற வசதிகள் எல்லாம் நிலை ஆனவைபோல் தோன்றுகின்ற தன்மை ஆசைகளை வளர்க்கின்றன எனலாம். அந்த ஆசைகள் நிறைவேறாதபோது மனம் பாதிப்புக்குள்ளாகிறது. ஆசை மட்டுமல்ல அசாதாரண சூழ்நிலை என்ன நடக்குமோ என்ற பயம் இவையும் மனப்பாதிப்புக்குக் காரணமாகின்றன. இவை எப்போதும் நிகழ்பவையல்ல. வெறுப்பு, போட்டி, பொறாமை, உறவுகளிடையே பகைமை ஏமாற்றம் போன்ற காரணங்களால் ஏற்படுகின்றன. இத்தனைக்கும் வித்து எது என்றால் ஆசைதான் ஆசையால் ஏற்படும் செயற்பாடுகள் சில சந்தர்ப்பங்களில் நேர்மை ஆனதாய் அமையாததால் பல துன்பங்கள் நேர்கின்றன. உதாரணம் செல்வந்தனைப் பார்த்துத் தானும் அப்படி

வரவேண்டும் என்று நினைக்கும் ஒருவன் நல்வழி தவறி சம்பளத்தோடு சேர்த்து, கையூட்டு, களவு, வஞ்சித்தல் போன்ற பல வழிமுறைகளைக் கையாண்டு தனது எண்ணத்தை நிறைவேற்ற முயலும்போது சில நேரம் சட்டத்தின் பிடியில் சிக்கி சம்பளம் இல்லா நிலை மட்டுமல்ல தொழிலையும் இழக்கும் நிலை ஏற்படலாம். இதன் மூலவேர் என்ன? என்றால் அது ஆசை 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற மனத்திருப்தியோடு வாழ்ந்தால் நிம்மதி. ஆசைக்குக் கட்டுப்படாமல் ஆசைகளைக் கட்டுப்படுத்தும் மனம் அமைந்துவிட்டால் அதுவே சிறப்பு. எனவே மனதை ஆசை அறுமின் ஆசை அறுமின் என்று ஒருமுகப்பட்டு இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். 'தீதும் நன்றும் பிற தர வாரா, தீமையானாலும் சரி, நன்மையானாலும் சரி மற்றவர்கள் கொடுத்து வாங்குவ தில்லை. நாமேதான் அதற்குப் பொறுப்பு. எமது மனத்தைத் தாண்டி சுகமோ, துக் கமோ ஏற்பட முடியாது. மனதைச் சுக மாக வைத்திருந்தால் துக்கத்தை மகிழ்ச்சியாக மாற்றிக்கொள்ள முடியும்.

மனதை அடக்கிவிட்டால் கோபம், வாயாடல், அடிதடி சண்டை அத்தனையும் நேரா. கோபத்தை விட்டால் இவை எவையும் இல்லை. அவன் அவனவனுக் குரியது அவனவனுக்குக் கிடைக்கும் இறை வனது சங்கல்ப்பப்படியேதான் எதுவும் நடக்கும் என்று நினைத்தால் மனம் அடங்கிவிடும். ஞானசம்பந்தர் தங்கியிருந்த இடத்துக்கு தீ வைத்தவர்களுக்குப் பதி லுக்குத் தீ வைக்கச் சென்றாரா? கோபம் கொண்டாரா? இல்லவே இல்லை. வெப்பு நோய் மன்னனுக்கு. மருந்துவரானார் சம் பந்தர். அந்த அளவு எம்மால் முடியா விட்டாலும் சிறிதளவாவது நாம் எமது மனதைக் கைவசம் கொண்டு வரவேண் டும். மனதில் தன்னம்பிக்கையுடன் கூடிய துணிவும் நம்பிக்கையும் வரவேண்டும்; வளர்க்க வேண்டும். என்னால் முடியும் என்று நினைத்தாலே தடைகள் தானே நீங்கிவிடும். பரீட்சையில் சித்தியில்லை; வாழ்க்கையில் சுகமில்லை என்ற பேச் சுக்கே இடமில்லை. நாவுக்கரசர் ஆளும் நாயகனைக் காணாது மாளும் உடல் கொண்டு மீளேன் என்ற அந்த நிகழ்வு எதைக் காட்டுகிறது. மனதில் நம்பிக்கை - துணிவு இரண்டும் சேர்ந்து நின்றமையால் பூலோகத்திலேயே கைலைக் காட்சியைக் காணமுடிந்தது. உருண்டு புரண்டு தவழ்ந்து எவ்வழியிலாயினும் தான் கொண்ட கொள்கையை நிறைவேற்றும் பாங்கு தெரிகிறது. இதைப் பக்தி வைராக்கியம் என்பர். இந்த வைராக்கியம் அவரது மனதில் இருந்தமையால்த்தான் செயலாக்கமுடிந்தது. நெஞ்சே நீ நினை யாய் யாரை? நிமிர் புன்சடை நிர்மலனை நினைக்கப் பெற்றால் மனம் நிர்ச்சலனமாய் இருக்கும். வசதி படைத்தவர் துன்பமாயும், வசதி குறைந்தவர் மகிழ்ச்சியாயும் இருக்க மனம்தான் காரணம். போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்று பழக்கப்பட்ட மனம்தான் காரணம்.

கண், செவி, நாக்கு என்பன மன ஒருமைப்பாட்டுக்குத் தடையாயுள்ளன. மனம் அழுக்காக இருந்தால் வெளி உலகும் அழுக்காகத் தெரியும். மனதைத் தூய்மையாக்கினால் வெளி உலகும்

தூய்மையானதாய்த் தெரியும். நல்லதைப் பார்த்து, நல்லதைக் கேட்டு நல்லதையே பேசும் பக்குவத்தை மனதில் வளர்க்க வேண்டும்.

**தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

ஒவ்வொருவரும் தத்தமது நெஞ்சங்களைச் சரிபார்த்தால் உலகில் பிழை எதுவும் தெரியாது. பற்றின்மை மன அமைதிக்குக் காரணம். நம்பிக்கை சகல வெற்றிக்கும் காரணம். எனவே மனதை எமதாக்கிக் கொண்டால் எல்லாம் நிறைவு, எங்கும் அமைதி, எதிலும் இன்பம்.

## சிந்தனைக்கு சில நிமிடங்கள்....

தலைவிதிப்படிதான் எல்லாம் நடக்குமென்றால் சொந்த முயற்சி, அறிவு, செயல்திறன் ஆகியவை யாவும் அடிபட்டுப் போகிறதே அவையும் இறைவன் நமக்கு கொடுத்தவை தானே அவற்றை பயன்படுத்துவது எப்படி?

**சீட்டாட்டத்தைப் பார்த்திருக்கிறீர்களா அந்த ஆட்டத்தின் விதிப்படி சீட்டுக்கள் கலந்து போடப்படுகின்றன. எந்தச் சீட்டு நமக்குக் கிடைக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியாது எது கிடைத்தாலும் அதை எடுத்துக் கொள்கிறோம். பிறகு அவற்றை வைத்துக் கொண்டு நம்முடைய திறமையை உபயோகிக்கின்றோம். ஆட்டத்தில் வல்லவன் ஒருவன் சாதாரண சீட்டுக்களை வைத்துக் கொண்டு வெற்றி அடைகின்றான். ஆடத் தெரியாதவனிடம் மிக நல்ல சீட்டுக்கள் கிடைத்தாலும் அவனுக்கு வெற்றி பெறும் வாய்ப்பு கிடைப்பதில்லை விதி என்பது நமக்குக் கிடைக்கும் சீட்டுக்களைப் போல் அதைநாம் தான் கலைத்து நமக்கே போட்டுக் கொள்கிறோம். நாமே அமைத்துக் கொள்வது என்றாலும் அதை அனுபவிக்கும் வரையில் அது எப்படிப்பட்டது என்பது எமக்குப் புரிவதில்லை நல்ல சீட்டுக்கள் போல் நல்ல குடும்பம். நல்ல சூழ்நிலை, நல்ல அறிவு அமைகின்றன. நாம் ஆடும் சாமர்த்தியத்தைப் போல் நம்முடைய பழக்கங்கள் நமக்குக் கிடைக்கும் உதவி. நாம் பயன்படுத்தும் திறமை ஆகியவை அமைகின்றன. நல்ல சீட்டுக் கிடைத்து விடுவதால் ஒருவன் வெற்றி அடைவதில்லை. நல்ல அறிவும் வாய்ப்பும் இருப்பதனால் மட்டும் ஒருவன் வெற்றி பெற்று விடுவதுமில்லை. நம்முடைய வாழ்க்கையிலும் விதிவசமாக நமக்குச் சீட்டுக்கள் கிடைக்கின்றன. ஆனால் அதைப் பயன்படுத்தி வெற்றியோ, தோல்வியோ அடையுந்திறன் நம்மிடமே இருக்கின்றது. இதை இவ்வாறு இப்படி பயன்படுத்த வேண்டும் என்ற வழியை அதுதான் நமக்குக் கொடுக்கிறது. அதை நல்ல வகையில் பெறவும் தடைகள் ஏற்படாமல் இருக்கவுமே நாம் கடவுளை வேண்டிக் கொள்கிறோம்.**

தன்னைப் பற்றியே பேசுகிறவனுக்கு எப்போதும் நஷ்டந்தான்.

உ

# அருணகிரிநாத சுவாமி விழா 2009



சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் விழாக்களில் அருணகிரிநாதர் விழாவும் குறிப்பிடத்தக்கது. இவ்விழாவானது வருடாவருடம் யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறுகிறது.

மேற்படி குருபூசை நிகழ்வு 10.07.2009 வெள்ளிக்கிழமை காலை வழமைபோல ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட அபிஷேகபூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் அமைதியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இவ்விழாவின் விசேட நிகழ்வாக "வாக்கிற்கு அருணகிரி" எனும் விடயம் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களால் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றது அடுத்து யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது.

மேற்படி விழா ஆச்சிரமத்தினால் மேற்கொள்வதற்கு காரணமாய் இருந்த சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கட்கும் கரணவாயைச் சேர்ந்த ம. கதிரிப்பிள்ளை அவர்கட்கும் அனுசரணை நல்கிவரும் புதிய விஞ்ஞானக் கல்வி நிலைய நிர்வாகி அவர்கட்கும் நன்றி தெரிவித்ததோடு அருணகிரிநாத சுவாமி விழா சிறப்பாக முற்றுப்பெற்றது.

# திருவிளையாடற்புராண வசனரூபம்

-ஆறுமுகநாவலர்-

படலம்-11

## உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்

கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுள் "பாண்டியனாகி" நல்லாட்சி செய்து வந்தார். அதனால் தமிழ் நாட்டு மூவேந்தருள்ளும் பாண்டியனுடைய குடியே மிக மேன்மை பெற்றது. இந்நிலையில் உலக உயிர்களெல்லாவற்றுக்கும் மாதாவாகிய பிராட்டியாரிடத்தே தமது நெற்றிக்கண்ணினின்றும் தோன்றிய முருகக் கடவுள் தோன்றும் வண்ணம் திருவுளஞ் செய்தருளினார். அக் கருணைக் குறிப்புக்கு ஏற்ப தடாதகைப்பிராட்டியார் கர்ப்பவதி போலானார்.

சோமவாரமும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்திலே சோமசுந்தரக் கடவுளும் பிராட்டியாரும் கொண்டருளிய திருக்கோலத்திற்கு ஏற்ப அருட்கடலாகிய முருகப்பெருமான் பிராட்டியாரிடத்தே திருவவதாரஞ் செய்தருளினார். பிராட்டியார் அக்குழந்தையைக் கையிலெடுத்து உச்சி மோந்து தன் நாயகரது திருக்கரத்திலே கொடுத்து, மீண்டும் வாங்கி திருமுலைப்பாலை ஊட்டினார். விஸ்ணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், சேரனும் சோழனும், வடதேசத்து அரசர்களும் தத்தம் சேனைகள் சூழ மதுரையை அடைந்தார்கள். அனைவரும் சுந்தர பாண்டியரையும் தடாதகைப் பிராட்டியாரையும் வணங்கித் துதித்து மகிழ்ச்சி கொண்டாடினர்.

சுந்தரபாண்டியர், குழந்தைக்கு "உக்கிரவருமன்" எனப் பெயர் சூட்டினார். உக்கிரவருமன் வளர்ந்துவரும் நாளில், தேவகுருவாகிய பிரகஸ்பதி மூலம் அறுபத்துநான்கு கலைகளையும் (எட்டுவயதுக்குள்ளேயே) கற்றுத்தேறி பண்டிதரானார்.

பதினாறாம் வயதினிலே சோமசுந்தரபாண்டியர் உக்கிரவருமனுடைய குண இயல்புகளை நோக்கி, இவன் புகழ் -நீதி - மெய்ம்மை -சிவபக்தி -ஜீவகாருண்யம் -கொடை -கல்வி அனைத்திலும் மேம்பட்டு உலகமெல்லாம் ஒரே நாயகனாய் வாழப் பிறந்தவன். இவனுக்கு முடிசூட்ட முன்னர், விவாகஞ் செய்தல் வேண்டும். எனத் திருவுளங்கொண்டு மந்திரிமாரோடு கலந்தாலோசனை செய்தார்.

படலம்-12

## உக்கிர குமாரனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம்

சுந்தர பாண்டியர் தம்முடைய அருமைத் திருக்குமாரராகிய உக்கிரவருக்கு விவாகஞ் செய்யக் கருதி மந்திரிமாரோடும், அறிஞர்களோடும் கலந்

தாலோசித்தார். இறுதியில் வட தேசத்திலுள்ள மணவூரென்னும் நகரத்துக்கு அரசனாகிய சூரிய குலத்துதித்த சோமசேகரனுடைய புதல்வியாகிய காந்திமதியை விவாகம் பேச முடிவு செய்தனர்.

அன்றிரவு சோமசுந்தரக் கடவுள் சோமசேகரராசாவுடைய கனவிலே தோன்றி, “அரசனே! யாம் மதுரையில் எழுந்தருளி இருக்கின்ற சிவபிரான். நீ உன் புதல்வியாகிய காந்திமதியை மதுரை கொண்டு சென்று, சுந்தரபாண்டியருடைய குமாரனாகிய உக்கிரவருமனுக்கு விவாகஞ் செய்து கொடுப்பாயாக” எனப் பணித்தருளினார். சோமசேகரராசா விழித்தெழுந்து மனமும் முகமும் மலர இறைவன் கருணையை நினைந்து ஆனந்தமயமானார். தன் கருமங்கள் அனைத்தையும் முடித்து, தன் புதல்வியையும் சேடியரையும் தேர் மேலேற்றி நால்வகைச் சேனைகள் சூழ, விவாகத்துக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களுடனும் சீர்வரிசைகளுடனும் மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

மணவூரை நோக்கி வந்த சுந்தரபாண்டியர்களின் மந்திரிமார்களும் பரிவாரங்களும் வழியில் இவர்களைக் கண்டு முகமன் கூறி மதுரையை நோக்கி அழைத்து வந்தனர். சோமசேகரன் சுந்தரபாண்டியரை வணங்க, அவரை ஆரத்தழுவி ஆசனங் கொடுத்தருளினார் சுந்தரபாண்டியர்.

அதன் பின்னர் விவாகதினம் நிட்சயிக்கப்பட்டது. அரசர்கள் அனைவருக்கும் திருமண அழைப்பிதழ் அனுப்பப்பட்டு நகரெங்கும் அலங்கரிக்கப்பட்டது. தேவர்களும் முனிவர்களும் மற்றும் அனைவரும் விவாக மண்டபம் வந்து குவிந்தனர்.

திருமணவேளையும் வந்தது. உக்கிரகுமாரருக்கு மணக்கோலஞ் செய்து அழைத்து வந்தனர். காந்திமதியையும் அலங்காரஞ் செய்து அழைத்து வந்து உக்கிரகுமாரருக்கு வலப்பக்கத்தில் இருத்தினார்கள். அப்பொழுது சோமசேகரன், காந்திமதியின் கையை உக்கிரபாண்டியருடைய கையிலேந்தி வேத மந்திரங்கள் சொல்லி, “சூரிய குலத்தரசனாகிய சோமசேகரன் என்னும் பெயருடைய யான், சந்திரகுலம் விளங்க வந்த சுந்தரபாண்டியனுடைய குமாரராகிய உக்கிரவருமனுக்கு என் புதல்வியைக் கொடுத்தேன்” எனச் சொல்லி தத்தஞ் செய்து கொடுத்தான். மங்கள வாத்தியம் முழங்க, தேவர்கள் பூமாரி பொழிய உக்கிரகுமாரர் காந்திமதிக்குத் திருமாங்கல்யம் சூட்டினார். மணமக்கள் தாய் தந்தையரை வணங்கி நின்றனர். சுந்தரபாண்டியர் கல்யாணத்தின் பொருட்டு வந்திருந்த அனைவருக்கும் வரிசைகள் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

சில நாட்களின் பின் சுந்தரபாண்டியர் உக்கிரபாண்டியரை நோக்கி, “புத்திரனே! இந்திரனும் வருணனும் உனக்குப் பகைவர்கள். மேருமலை தருக்கடையும். ஆதலால், இந்திரனுடைய முடி சிதறும் வண்ணம் இந்த வளையை எறிவாயாக; கடல் சுவறும் வண்ணம் இந்த வேலை விடுவாயாக மேருமலை தருக்கொழியும் வண்ணம் இந்தச் செண்டினால் அடிப்பாயாக” என்று சொல்லி அம்மூன்று படைக்கலங்களையும் உக்கிரகுமாரன் கையில் கொடுத்தருளினார். அவரும் தந்தையை வணங்கித் தொழுது அம்மூன்றையும் பெற்றுக் கொண்டார்.

**உன் உழைப்பையும் அறிவையும் பொறுத்துத்தான் உன் வாழ்க்கைத்தரம் இருக்கும்.**

உ

# வினை

**~ வாரியார் சுவாமிகள் ~**

**இருவினையால்:**

உலகில் உள்ள உயிர்கட்கு எப்பொழுதும் இன்பதுன்பங்கள் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கின்றன. சிலர் வாழ்வதும் சிலர் தாழ்வதும் சிலர் சுவர்க்கம் புகுவதும் சிலர் நரகம் புகுவதும் ஏன்? உயிர் தன் விருப்பப்படி செய்யுமாயின் எல்லாவுயிர்களும், தனவந்தர் வீட்டில்த்தானே பிறக்கும், உயர் குடியில்த்தானே பிறக்கும்,

இறைவன் ஆணையின் வழி இவை நிகழ்கின்றன. அங்ஙனமாயின் பட்சபாதம் உள்ளவனாகிறான். இறைவனுடைய! அருட்குணத்திற்கு இது முரணாகிறது. உயிர்களின் இருவினைக்கு ஏற்ப இறைவன் இவ்வாறு ஐந்தொழில்களையும் புரிகின்றான். அதனால், இறைவனுக்குப் பட்சபாதம் இல்லை என்றறிக.

நிமித்த காரணனாகிய இறைவனுக்கு ஆணையேயன்றி வினையுந் துணைக்காரணம் என்க. வினையின் வண்ணமே எல்லாம் நடக்கும் என்றால், இறைவன் எதற்கு? எனின், வினை சடப்பொருள் ஆதலின் தானே வந்து செய்தவனைப் பொருந்தாது ஆதலினால் அந்தந்தக் காலத்தில் அவ்வவ் வினையை அறிந்து பொருத்துவதற்கு இறைவன் வேண்டும் என்று உணர்க.

இனி, உயிர்கள் சித்துப் பொருள்தானே? அவ்வுயிர்களே அவ்வினைகளை எடுத்து நுகருமே? ஆதலில் வினைகளை ஊட்டுவதற்கு இறைவன் எதற்கு? எனின் ; உயிர்கள் தாமாயறியா ; அறிவித்தால் மட்டுமேயறியும்: ஆதலின், அறிந்து ஊட்டுவதற்கு இறைவன் இன்றியமையாதவனாகிறான்.

**"அவ்வினையைப்**
**பேராம லூட்டும் பிரானின் நுகராரேல்**
**ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு"**

**– சிவஞானபோத அதிகரணம்**

அப்படியாயின் வினையின் வழியே உயிர்கட்கு, இறைவன் சுகதுக்கங்களைத் தருகிறான் என்றால் இறைவனுடைய சுதந்திரத்திற்கு இழுக்கு எய்துமே எனின் எய்தாது என்க. குடிகளுடைய குற்றங் குணங்கட்கு ஏற்ப அரசன் அருளுந் தண்டமுஞ் செய்வதனால் அரசனுடைய சுதந்திரத்திற்கும் இழுக்கில்லையல்லவா?

வினை ஆதியா? அநாதியா? என்ற ஐயம் எழுவது இயல்பு: ஆதியாயின் இல்லது தோன்றாது என்ற சற்காரிய வாதம் பிழைபடும்: ஆகவே, வினை அநாதியே உண்டு என்க. அது எதுபோலெனின் நெல்லிற்கு உமியும், செம்பிற்குக் களிம்பும் போல் உயிர்களுக்கு வினை தொன்மையென அறிக.

**நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்**
**சொல்லிற் புதிதன்று தொன்மையே – வல்லி**

**மலகன்மம் அன்றுளவாம் : வள்ளலார் பொன்வாள்**
**அலர் சோகஞ் செய்கமலத் தாம்**

**வினை மூவுருவங் கொள்ளும்:**

வினை ஈட்டப்படுங்கால் மந்திர முதலிய அத்துவாக்களிடமாக, மனவாக்குக் காயங்கள் என்ற மூன்று காரணங்களால் ஈட்டப்பட்டுத் தூலகன்மமாய் ஆகாமியம் எனப் பெயர் பெறும்.

பின்னர், பக்குவமாகும்வரை புத்திதத்துவத்தினிடமாக மாயையிற் கிடந்து சாதி, ஆயு, போகம் என்னும் மூன்றுக்கும் ஏதுவாகி, முறையே சனகம், தாரகம், போக்கியம் என்ற மூவகைத்தாய் அபூர்வம், சஞ்சிதம், புண்ணியபாவம் என்னும் பரியாயப் பெயர் பெறும்.

வினை பக்குவமாதல் என்பது அவ்வவ் பயன்களைத் தோற்றுவித்தற்குரிய துணைக் கருவிகள் எல்லாவற்றோடு கூடுதல் என அறிக.

அது, பின்னர் பயன்படுங்கால் ஆதிதைவிகம், ஆதியான்மிகம், ஆதிபௌதிகம் என்ற முத்திறத்தால் பலவகைப்பட்டு பிராரப்தம் எனப் பெயர் பெறும்.

எனவே, ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என வினை மூவுருவங் கொள்ளும்.

**ஆகாமியம் – செய்யப்படுவது**
**சஞ்சிதம் – பக்குவப்படாமல் இருப்பாக நிற்பது**
**பிரார்ப்தம் – அநுபவிப்பது**

இனி, பிராரப்தம் ஆதிதைவிகம், ஆதியான்மிகம், ஆதிபௌதிகம் என்ற மூன்று வழியாக வரும் என்றோமே! அதன் விபரம் வருமாறு:

01. **ஆதிதைவிகம்** : தெய்வத்தால் வரும் இன்பதுன்பங்களாம்.
அவை: கருவிற் சேர்தல்; பிறக்கும் போது எய்தும் இடர்; நரை திரை மூப்பு முதலியன. நரகத்தில் ஆழ்தல் ; உலகையரசு புரிதல் முதலிய துன்ப இன்பங்களாம்.

02. **ஆதியான்மிகம்** : தன்னாலும் பிறராலும் வரும் துன்ப இன்பங்களாம்.
அவை: மனத்துயர் : பயம் ; சந்தேகம் ; கோபம் ; மனைவி, மக்கள், கள்வர், பகைவர், நண்பர், விலங்கு, பேய், பாம்பு, தேள், எறும்பு, கறையான், அட்டை, நண்டு, முதலை, மீன் முதலியவைகளினால் வரும் துன்ப இன்பங்களாம்.

03. **ஆதிபௌதிகம்**: மண் முதலிய பூதங்களால் வரும் இன்ப துன்பங்கள்.
அவை : குளிர்ச்சி, மழை, வெயில், கடுங்காற்று, இருள், மின்னல், இடி, தென்றல் முதலியன.

இன்னும் உலகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் என வினை ஐவகைப்படும்.

01. **உலக வினை** : கிணறு, குளம், தண்ணீரப்பந்தல் முதலியன செய்வதால் உண்டாவதாய், நிவிர்த்திகலையில் அடங்கிய புவனபோகங்களைத் தருவது.

02. **வைதிக வினை** : வேதத்துள் விதித்த அக்கினிட்டோமம் முதலிய வேள்வி முதலியன செய்தலால் உண்டாவதாய் பிரதிட்டாகலையில் அடங்கிய புவன போகங்களைத் தருவது.

03. அத்தியான்மிக வினை : வேதநெறியாற் செய்யும் பூசனை துறவு முதலியவற்றால் உண்டாவதாய் வித்தியாகலையில் அடங்கிய புவன போகங்களைத் தருவது.


04. அதிமார்க்க வினை : இயமம், நியமம் முதலிய யோகப்பயிற்சியால் உண்டாவதாய்ச் சாந்திகலையில் அடங்கிய புவன போகங்களைத் தருவது.

05. மாந்திர வினை : சுத்தமந்திரங்களைக் கணித்தல் முதலிய ஞானப்பயிற்சி விசேடங்களால் உண்டாவதாய் சாந்தியதீதகலையில் அடங்கிய புவன போகங்களைத் தருவது.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் அறியப்படுவது பிறவிக்கு வினை காரணம். அவ்வினை அற்றாலன்றிப் பிறவி அறாது எனத் தெளிக.

## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின்

### 24 ஆவது குருபூசைத் தினம் (28.07.2009)



**மேற்படி சுவாமி அவர்களின் குருபூசைத் தினம் 28.07.2009 செவ்வாய்க் கிழமை அன்று வழமை போன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்துசந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பக்தி பூர்வமாக குருபூசை நிகழ்வுகள் இடம்பெற்றது.**

## சந்நிதியான் துணை வேண்டி......!



ஆற்றங்கரை தனில் அமர்ந்திருக்கும் வேலவனே.
உம்திரு வீதி மரநிழலினிலே வீற்றிருக்கும் அடியவர்கள்
கேட்க வந்த வரம்தனை கேட்கும் முன்பே அருள்பவரே
உம்திருவடியே தஞ்சமென வந்தவர்தம் கலி தீர்ப்பீர்
மயிலேறி மனைதோறும் துயர்தீர்க்கும் மயிலோனே
உன் அடியான் என் துயர்தான் தீர்க்காமல் போவீரோ
நின் துணை நம்பியென் புதுவழியில் தொடர்கின்றேன்.
உன் அருளால் வென்றிடுவேன் சந்நிதியான் தரணியிலே.

கோப்பாய் வாழ்
S.K. யதுகரன்

உ

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்

செல்வி தி. வரதவாணி அவர்கள்

ஈழத் திருநாட்டின் இந்துமத விடிவெள்ளியில் ஒருவராகத் திகழ்ந்த அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்களது அற்புத வரலாற்றையும் அருட் சம்பவங்களையும் நோக்கும்போது, ஒவ்வொரு மனிதனும் இறைமார்க்கத்தைக் கைக்கொண்டு இறையனுபவம் பெற்று இறையருள் பெறவெண்டும் என்ற நோக்கில் அவர் ஆற்றிய ஈடிணையற்ற பணிகளே எம் கண்முன் வருகின்றது. சமய, சமூக, சோதிட, வைத்திய பணிகள் எனும் பல்வேறுபட்ட பணிகளில் ஒன்று இவர் ஆற்றிய இலக்கியப் பணி ஆகும். இவரது இலக்கியப் படைப்பின் தனித்துவம் யாதெனின் பண்டிதர் முதல் பாமரர் வரை, சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் உணரும் வகையில் அமையப்பெற்றிருக்கும். அத்துடன் பஜனைப்பாடல்கள், வசன காவியங்கள், நாட்டிய நாடகங்கள், கீர்த்தனைப் பாடல்கள், தமிழ் அர்ச்சனை மந்திரங்கள், பிரபந்தங்கள், உரைநடை நூல்கள் எனப் பலவகைப்பட்ட நூல்களை உருவாக்கி மக்களை இலகுவான முறையில் பக்திக்குள் கொண்டு சென்றுள்ளார். இவ்விடத்தில் குறிப்பிடப்படவேண்டிய விடயங்களில் ஒன்று தலங்கள் மீதுள்ள மகிமையைப் புலப்படுத்தும் தலபுராணங்கள் வரிசையில் ஈழத்துத் தலபுராணங்களில் இறுதியாக எழுந்தது எனும் சிறப்புக்குரியது "செல்வச் சந்நிதி தலபுராணம்" ஆகும். இதனை இயற்றிய பெருமைக்குரியவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா அவர்களேயாவார்.

இத்தகைய இலக்கியப்படைப்பாளியாக இவர் உருவாக்கிய ஒவ்வொரு தெய்வங்களின் அவதாரமகிமை பற்றி விளக்கும் நூல்களின் வரிசையில் ஒன்றுதான் "கண்ணன் வந்த வண்ணம்" என்னும் கிருஷ்ண அவதார மகிமையை விளக்கும் நூல். இலகு தமிழில் இனிய செய்யுள் நடையில் அமைந்த இந்நூலிற்கு சற்று உரைநடை, விளக்கம் தந்து அவர் ஆற்றிய கைங்கரியத்தை மெருகூட்டலாம் என நினைத்து கிருஷ்ண அவதார மகிமையைப் பற்றி இக்கட்டுரை அமைகின்றது.

**காப்பு**

**உலகுக் கொரு முதலே ஓங்கார நாதக**
**கலைவடிவே செல்வக் கணேசா - நிலையில்லா**
**நாயேனின் நெஞ்சினிலே ஞானகுரு வாயிருப்பாய்**
**தாயாகி வேண்டுவன தந்து -**

எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்றே ஆகும். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருள் திருவருள் பாலிப்பதற்காக பல்வேறு திருவுருவங்கள் எடுக்கிறார். அவ்வாறு நாராயணன் எடுத்த ஆயவடிவு

பதினாறாயிரத்துள் ஒன்றே. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா என்பது கண்ணன் அவதாரம் ஆகும்.

"சீராரும் உலகங்கள் எல்லாம் - காக்கும்
திருமாலின் அவதாரப் பெருமையுரைப் பேனே
தாராரும் துளபமணி மார்பன் - வேத
சாரங்க பாணியின் வருகையுரைப் பேனே

அவதாரம் பலகோடி கொண்டான் - அவற்றுள்
அருட் கண்ணன் அவதாரப் புகழினைக் கேளீர்
புவனத்தின் கொடும் பாரம் கண்டு - அன்னை
புவிமாது பசுவினது வடிவினைத் தாங்கி

தேவர்படை சூழ்ந்துவரச் சென்று - மாயன்
திருப்பள்ளி செய்கின்ற பாற்கட லடைந்தான்
கோவிந்தா வைகுந்த வாசா - என்றன்
குறைகேட்டுத் திருவுள்ளம் இரங்குவாய் போற்றி

இவ்வுலகமானது பல்வேறுபட்ட அரக்கர்களின் கொடிய செயல்களால் கொடுமையை அனுபவித்தது. உலக அதிபதியாகிய பூமாதேவிப்பிராட்டியார் இக்கொடிய செயல்களால் பாரம் தாங்க முடியாது தவித்தாள். பசுமாட்டின் வடிவம் எடுத்து பிரம்மா, சிவன் ஆகியோரிடம் முறையிட்டாள். அவர்களும் இக்கொடுமையை நீக்கவல்லவர் விஷ்ணுவே எனக் கூறி இறுதியில் பிரம்மா, சிவன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் பாற்கடலில் பள்ளி கொள்ளும் விஷ்ணுவை அடைந்து கோவிந்தா, வைகுந்தவாசா, பாண்டுரங்கா, எனக் கூவி அழைத்து பூமியின் பாரம் பொறுக்க முடியவில்லையே நடக்கும் அநீதியைத் தாங்க முடியவில்லையே அசுரரை அழித்து நீதியை நிலைநாட்ட வேண்டும் ஐயனே என வேண்டி நின்றனர்.

"என்று பூ தேவியும் இமையோர் அனைவரும்
நின்றுநெக் குருக நெடுமால் விழித்து
துன்றிடு கதிர்முடி துலங்கிடப் புன்னகை
நன்றுறப் புரிந்து நாமுமைக் காப்போம்

தேவர்க ளெல்லாம் யாதவர் ஆகுக
தேவமா தர்களும் கோபிய ராகுக
மேவுமென் அம்சம் விளங்காதி சேடன்
நாவுயர் அண்ணனாய் ஞாலத் துதிப்பான்

பார்மக ளேநின் பாரம் தீர்ந்திட
பேர்வளர் கண்ணனாய்ப் பிறப்பேன் யானே
நீர்மலி பாற்கடல் நீங்கிப் பூமியின்
சீர்பெற உதிப்பேன் செயல்காண் என்றான்.

இவ்வாறாகப் பூமாதேவியும் தேவர்களும் வேண்ட அறிதுயில்புரியும் திருமால் கண்விழித்து புன்னகை புரிந்து பூமாதேவியே, தேவர்களே, நீங்கள் அஞ்ச வேண்டாம் கொடியாரை அழித்து அடியாரைக்காக்க யான் வருவேன். யான் குலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாயும் தேவர்கள் ஆகிய நீங்கள் யதுவம்ச இடையர்களாகவும் தேவமாதர்கள் கோபியராகவும் எனது அம்சமாகிய ஆதிசேடன் எனக்கு அண்ணணாகவும் (பலராமன்) ஆகவும் பூமாதேவியின் பாரம் தீர்க்கப் பிறப்பேன் என்று திருவாய்மலர்ந்து அருளினார்.

சிலநாட்களில் சூரசேனன் என்னும் யதுகுல மன்னன் மகன் வாசுதேவர் என்பவருக்கும் தேவகி என்ற பெண்மணிக்கும் தெய்வீகத் திருமணம் நிகழ்கிறது. தேவகியின் தந்தையாரான தேவகர் மிகுதியான சீர்களைக் மகளுக்குக் கொடுத்து, தமது திருமண வழக்க முறைக்கு ஏற்ப கம்சனை, மணமக்களின் ரதத்தை ஓட்டிச்சென்று கணவன் வீட்டில் சேர்ப்பித்து வரும்படி கூறியிருந்தார். கம்சன் கொடிய குணத்தை யுடையவனாக இருந்தாலும் தங்கை தேவகி மீது மிகுந்த அன்பு கொண்டவன். தங்கையை மகிழ்வித்த படி பல்வேறு உபசாரங்களோடு மணமக்கள் ரதத்தை கம்சன் ஓட்டிச்செல்கிறான்.

**"வண்ணச் சகோதரி வாழ்வு சிறந்திட**
**மனங்கொண்ட கம்சன் சினங்கொள்ள**
**விண்ணில் எழுந்தது திண்ணிய வாக்கொலி**
**வேகத்தின் வண்டியை நிறுத்தி நின்றான்**

**இன்பச் சகோதரி தேவகி பெற்றிடும்**
**எட்டாம் குழந்தையால் உன் வாழ்வில்**
**துன்பமும் மரணமும் வந்திடு மென்றங்கு**
**சொன்னது வானொலிப் பொன்வாக்கு**

மகிழ்வுடன் மணமக்களுடன் வீதியுலா வருகின்ற கம்சனை சினங்கொள்ள வைக்கும் வகையில் அசரீதி ஒன்று கேட்டது. "அடாமுடனே நீ செய்யும் கொடுமைகளைப் பொறுக்காத தேவர்களின் முறைப்பாட்டின்படி, உனது சகோதரியின் வயிற்றில் பிறக்கப் போகும் எட்டாவது குழந்தையால் உன் வாழ்வு முடியப் போகிறது" என்றது.

**"சட்டென் டிறங்கினான் தங்கையை வெட்டினால்**
**தான்பிழைப் பேனென்று வாளெடுத்தான்...."**

தேவகி மீது மிகுந்த அன்புள்ள கம்சன் ஆகாயத்திலிருந்து வந்த அசரீதியைக் கேட்ட மாத்திரத்தில் வண்டியிலிருந்து கோபத்துடனே சட்டென்று இறங்கி தன்னிடம் இருந்த உறைவாளை உருவி தேவகியின் தலைமுடியைப் பிடித்திழுத்து வாளால் அவளைக் கொல்ல முனைந்தான். திருமணத்தில் கலந்து கொண்ட அனைவரும் திகைத்து நின்றனர்.

(தொடரும்...

உ

# செய்திச் சிதறல்கள்

- கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீடு 27.06.2009 சனிக்கிழமை அன்று செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் தலைமையில் நல்லூர் அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.
- நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையின் 50ஆம் ஆண்டு விழாவையொட்டிய பொன்விழாவும் அமுதசுரபி மலர் வெளியீட்டு நிகழ்வும் 02.07.2009 அன்று அமுதசுரபி கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது.
- நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு பிரதமகுரு நீரவை மணி பிரம்மஸ்ரீ கு. தியாகராஜகுருக்கள் அவர்களால் பாம்பன் சுவாமிகள் அருளிய சண்முககவசம் என்ற நூல் வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.
- ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி மனோன்மணி குலசிங்கம் அவர்கள் தொகுத்து வெளியிட்ட "ஸ்ரீ தட்சணாமூர்த்தி வழிபாடு" என்ற நூலின் வெளியீட்டு விழா கோண்டாவில் ஆசிமட விநாயகர் தேவஸ்தானத்தில் 02.07.2009 அன்று இடம்பெற்றது. அதன் அன்பளிப்புக்கள் யாவும் மக்கள் நலன்புரிக் கழகத்திற்கு வழங்கப்பட்டன.
- அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி கோவிலுக்கென இணையத்தளம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் முகவரி WWW.kaaddumalaikanthan.com
- அச்சுவேலி வடக்கு சரசாளி அருள்மிகு சித்திரவேலாயுத தேவஸ்தான சகஸ்த்திர சத சங்காபிஷேகம் (1008) 21.07.2009 செவ்வாய்க்கிழமை அன்று விசேட நிகழ்வுகளுடன் இடம்பெற்றது.
- சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் அவர்களால் எழுதப்பட்ட "பஞ்சகம்மாளர்" என்ற நூலை நல்லை ஆதீன குரு முதல்வர் அவர்களால் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் வைத்து வெளியிடப்பட்டுள்ளது.
- சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிறுவுநர் இந்து போட் அமரர் சு. இராசரத்தினத்தின் 125ஆவது பிறந்த தின நிகழ்வுகள் 04.07.2009 அன்று திருநெல்வேலி சைவ சிறுவர் இல்ல ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



திரு. வேலாயுதம் அவர்கள் கோடிக் கணக்கான பணத்தை ஆலயத்திருப்பணி வேலைகளுக்குச் செலவு செய்கின்ற அதே வேளை அந்தத் திருப்பணிச் செயற்பாடுகள் திட்டமிட்டப்படி நேர்த்தியாகவும் நிறை வாகவும் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதிலும் மிகவும் கவனமாகச் செயற்படுகின்ற ஒருவராகக் காணப்பட் டார்கள். 2006ஆம் ஆண்டு ஆனிப்பொங் கல் நடைபெறுவதற்குச் சில நாட்கள் இருக் கின்ற காலகட்டத்தில் ஒருநாள் மாலை நேரத்தில் திரு. வேலாயுதம் அவர்கள் சந் நிதி ஆலய வாசலில் கைதடி கயிற்ற சிற்றி முருகன் ஆலய திருப்பணி வேலைகள் பற்றி சில அன்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்ததை அடியேன் அவதானிக்க முடிந்தது.

அடுத்த நாள் காலையில் திரு. வேலாயுதம் அவர்கள் ஆச்சிரமத்திலிருந்து துவிச்சக்கர வண்டியில் தனியாக கைதடி கயிற்ற சிற்றி முருகன் ஆலயத்திற்கே சென்று விட்டார்கள். அங்கே ஆலயத்திருப்பணி வேலைகள் தொடர்பாகக் கூறவேண்டிய ஆலோசனைகளைக் கூறி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்த பின்பு அன்று மாலையே ஆச்சிரமத்திற்கு வேலாயுதம் திரும்பி வந்து விட்டதையும் பின்புதான் தெரிந்துகொண்டேன். ஆம் சந்தர்ப்பம் சூழ்நிலையைப் பொறுத்து எடுத்த காரி யத்தை சாதுரியமாகச் செய்து முடிப்பதில் எவ்வளவு கைதேர்ந்த அனுபவமும் ஆளு மையும் உள்ளவராக அவர் விளங்குகின்

றார் என்பதையும் அப்பொழுது என்னால் உணர முடிந்தது.

ஆலயச்சூழலில் தங்கிருந்த திரு. வேலாயுதம் அவர்கள் நல்லவற்றையே நினைத்து நல்லவற்றையே செயற்படுத்து கின்ற ஒரு நல்ல மனிதராகவே செயற் பட்டார்கள். காத்திரமான பெரிய விடயங் களானாலும் சரி சிறிய விடயங்களானாலும் சரி அவருடைய சிந்தனை தூய்மையான சமயத் தொண்டாகவே அமைந்திருந்தது என்பதைப் பல சந்தர்ப்பங்களிலும் நாம் அவ தானித்திருக்கின்றோம். 2006ஆம் அண்டு ஆடிப்பொங்கல் முடிந்துவிட்ட நிலையில் ஆலய வாசலில் அடுத்தநாளும் பொங்கு வதற்காக பயன்படுத்தப்பட்ட பொங்கற் கற்கள் அப்படியே விடப்பட்டிருப்பதை அவ தானித்த வேலாயுதம் அவர்கள் தானே நேரடி யாக முன்னின்று ஆலயச்சூழலில் உள்ள அன்பர்களின் உதவியுடன் அவற்றை அங் கிருந்து அகற்றி அந்த இடத்தை இயல் பான சூழலுக்குக் கொண்டுவந்தார்கள். அத் துடன் அந்த வேலைகளில் ஈடுபட்ட அன் பர்களுக்கு தனிசமான பணத்தையும் வழங்கி அவர்களது மனதையும் நிறைவடையச் செய்திருந்தார்கள்.

30.07.2006 ஞாயிற்றுக்கிழமை, இந்த நாள்தான் திரு. வேலாயுதம் அவர்கள் தான் எடுத்த அந்த விநோதமான முடிவைச் செயற்படுத்தி எமது உள்ளங் களை எல்லாம் உறைய வைத்த அந்த துன்பியல் சம்பவம் இடம்பெற்ற நாளாகும்

29.07.2006 சனிக்கிழமை இரவு 7.30 க்கும் 8.00 மணிக்கும் இடைப்பட்ட நேரம் ஆச்சிரமத்தின் சாமியாரும் அடியே னும் ஆச்சிரமத்தின் முன் மண்டபத்தி லுள்ள சுவாமிகள் வழமையாக அமரு கின்ற அந்த மேசையின் அருகில் அமர்ந் திருந்தோம். எங்கள் இருவருக்கும் அது ஆறுதலான நேரம் என்பதால் இருவரும் மனம்விட்டு எமது செயற்பாடுகள் பற்றி உரையாடிக்கொண்டிருந்தோம். அப் பொழுது அங்கே ஆச்சிரமத்தில் தங்கியிருக் கின்ற தனது அறையிலிருந்து புறப்பட்டு நாங்கள் அமர்ந்திருக்கின்ற அந்த முன் மண்டபத்தைத் திரு. வேலாயுதம் அவர்கள் வந்தடைந்தார்கள். அவ்வாறு வந்தடைந் தவர் ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு அரு கில் வந்து இயல்பாகச் சில கதைகளை சுவாமிகளுடன் கதைத்து விட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ஆலயத்தைச் சென்றடைவதற்காக இயல்பான அந்த மிடுக்கு நடையுடன் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டார்கள் ஆம் இரவுச் சாப்பாட்டை ஆச் சிரமத்தில் முடித்தபின்பு படுத்து உறங்கு வதற்காக ஆலயத்திற்குச் செல்கின்ற வழ மையான அந்தச் செயற்பாட்டையே அன்றும் வேலாயுதம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவ்வாறு சாமியாரிடம் விடை பெற்று ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்ற திரு. வேலாயுதம் அவர்கள் சில மீற்றர் தூரம் மட்டுமே சென்றிருப்பார்கள் ஏதோ மனதிற்குள் நினைத்திருக்க வேண் டும். மீண்டும் எமக்கருகே திரும்ப வந்தார் கள் அவ்வாறு திரும்பி வந்தவர் சாமியாருக்கு எதிரே இருந்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்த அடியேனை நோக்கி "மாஸ்ரர் போய் விட்டு வருகின்றேன்" எனக் கூறிக்கொண்டார்கள் அடியேனும் "ஓம் போய் விட்டு வாருங்கள்" எனப் பதிலுக்காகக் கூறிக்கொண்டேன். நான் அவ்வாறு கூறிய தனால் வேலாயுதம் அவர்களது உள்ளத் தில் ஒருவித நிறைவு ஏற்பட்டிருக்கவேண் டும். முகமலர்ச்சியுடன் மீண்டும் மிடுக்கான அந்த நடையுடன் ஆலயத்தை நோக்கிச் செல்லலானார்கள்.

ஆம்! அதுதான் திரு. வேலாயுதம் அவர்கள் எங்களுடன் உரையாடிய இறுதி நிகழ்வாகும். அடுத்த நாள் காலையில் ஆல யத்திலிருந்து ஆச்சிரமத்திற்கு வர வேண்டிய வேலாயுதம் அவர்கள் ஆச்சிர மத்திற்கு வரவில்லை. அதேநேரம் ஆலயத்தி லும் அவர் இல்லை என்பது தெரியவந்

தது. ஆனால் அன்று இரவு வழமைபோல பிள்ளையார் மண்டபத்தில் ஏனையவர் களைப் போல படுக்கைக்கு ஆயத்தமா கிக் கொண்டிருந்ததையும் ஏனையவர்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தது. இந்நிலையில் அவருக்கு என்ன நடந்தது என்பதை அனைவரும் ஓரளவு ஊகித்துக் கொண்டனர். ஆம்! அவர் ஆற்றில் மூழ்கி யிருக்க வேண்டுமென்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டனர். அதற்கான சில தடயங்களும் அங்கே தென்பட்டன.

திரு. வேலாயுதம் அவர்கள் ஆற்றில் மூழ்கும்போது தன்னைத் தானும் காப்பாற்றாதவாறும் ஏனையவர்களும் காப்பாற்றிவிடக் கூடாது என்ற வகையிலும் செயற்பட்டுள்ளார்கள். நடுநிசிக்குப் பிந்திய நேரம் ஆற்றுக்குச் சென்று அங்கே தனது கழுத்துடன் ஒரு பெரிய கல்லை கட்டிய வாறு தானாகவே ஆற்றுக்குள் மூழ்கி தன் உயிரைப் போக்கிக் கொண்டுள்ளார் கள்.

ஆம் திரு. வேலாயுதம் அவர்கள் ஏற்கனவே தீர்மானித்தது போலவே தான் விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் சந்நிதியானைத் தனது உள்ளத்தில் நிறுத்தியவாறு சந்நிதியானது நாமங்களை உச்சரித்தவாறே 30.07.2006 ஞாயிற்றுக் கிழமை சந்நியானுடன் சங்கமமாகிவிட்டார் கள்.

இவ்வாறான ஒரு முடிவை திரு. வேலாயுதம் அவர்கள் ஏற்கனவே எடுத்துவிட்டார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது. 29.07.2006 சனி இரவு ஆச்சிரமத்தில் இருந்து ஆல யத்தை நோக்கிப் புறப்பட்டவர் திரும்பி வந்து அடியேனிடம் "மாஸ்ரர் நான் போய் விட்டு வருகின்றேன்" என்ற உருக்கமான தனது உணர்வை வெளிப்படுத்தும் பொழுதே உண்மையில் இது அவருடைய வழமைக்கு மாறான ஏதோ ஒரு செயற்பாட் டின் அறிகுறி என்பதை எனது உள்ளம் எனக்கு உணர்த்தியிருந்தது. ஆனாலும் இது போன்ற ஒரு விபரிதமான முடிவுக் குரிய அறிகுறியாக நான் அதனை அப் பொழுது எடுக்கவில்லை. ஆனால் திரு. வேலாயுதம் அவர்கள்தான் தனது முடிவை உறுதியாக எடுத்துவிட்ட நிலை யில் அடியேனுடனான இறுதி உரையாட லாகத்தான் எனக்கு அவ்வாறு கூறிச்சென் றார் என்பதை பின்பு என்னால் நன்கு உணர முடிந்தது.

29.07.2006 சனிக்கிழமை, இரவு பிள்ளையார் வாசலில் இறுதியாகச் சடைச் சாமியாரும் வேலாயுதம் அவர்களும் உறங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண் டிருந்த வேளையில் பரஸ்பரம் உரையா டிக்கொண்டிருந்துள்ளார்கள். அப்பொழுது "சட்டையை மாற்றுவது போல எமது உயிர மாறி மாறி பல்வேறு பிறப்புக்களை எடுக் கின்றது, அப்படி இல்லாத மோட்சமான நிலையை உயிர் அடையவேண்டும்" என்பன போன்ற கருத்துக்களை திரு. வேலாயுதம் அவர்கள் சடைச்சாமியாருடன் பகிர்ந்து கொண்டதையும் நாம் இவ்விடத் தில் வெளிப்படுத்துவது பொருத்தமானது.

சந்நிதியானது இடத்திலேதான் எனது உயிர்போகவேண்டும் எனது உடலை மிகவும் சாதாரண முறையில் அங்கேதான் தகனம் செய்யவேண்டும் என்று அடிக்கடி சாமியாருக்கும் ஏனையவர்களுக்கும் அவர் வெளிப்படுத்துவதுண்டு. அதுமட்டுமல்ல "ஞாயிற்றுக்கிழமைகளில் உடலைவிட்டு உயிர பிரிவது தான் மோட்சமடைவதற்கு உகந்தநாளாகும்" எனச் சாமியாரின் மூத்த புதல்வன் கண்ணனுடன் சில தினங்களுக்கு முன்பு இயல்பாக உரையாடும்பொழுது கதையோடு கதையாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதையும் நாம் பின்பு அறியமுடிந்தது. ஆம்! இவை எல்லாம் அவர் அந்த விபரிதமான முடிவை ஏற்கனவே எடுத்து விட்டார் என்பதற்கான சில ஆதா ரங்களாக இருப்பதை அடியார்கள் அறு

மானிக்க முடியும்.

திரு. வேலாயுதம் அவர்கள் இவ்வாறான ஒரு விபரீதமான முடிவை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை அவர் ஏற்கனவே எடுத்துள்ளார் என்பதை நாம் உணரமுடிகின்ற பொழுதிலும் ஏன் இவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுத்தார் என்பதுதான் இதுவரை எமக்கு தெளிவாகத் தெரியாத விடயமாக உள்ளது.

தனது உடல் உபாதையிலிருந்து விடுபடுவதற்காகவா? அல்லது இவ்வுலகில் தான் வாழ்ந்த காலம் போதும் ஆலயத்திருப்பணிகள் தொடர்பாக செய்த கடமைகள் போதும் என்பதா? எனப் பலவாறு நாம் சிந்திக்க முடியும். அது மட்டுமல்ல அவரது வாழ்க்கைப்பாதையில் பிற்காலத்தில் அவர் உளரீதியாக சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்ததையும் நாம் அறியமுடிகின்றது. இவர் துடிப்புள்ள இளைஞனாக இருந்த காலத்தில் தனக்கு வாகனம் (கார்) வாங்கித்தரவில்லை என்பதனால் தனது தாயார் மீது கொண்ட கோபத்தினால் தாயாருடன் தங்கி வாழாமல் வேறு உறவினர் வீட்டிலேயே தங்கி வாழ்ந்துள்ளார். ஆனால் பிற்காலத்தில் தாய்ப்பாசம் தனக்குக் கிடைக்காமற் போனதையிட்டும் அதற்கு தானே காரணமாக இருந்துவிட்டேன் என்பது குறித்தும் மிகுந்த வேதனையடைந்துள்ளார். இதேபோன்று பிற்காலத்தில் அவரது குடும்பத்திற்கும் அவருக்கும் ஏற்பட்ட அந்த இடைவெளியும் இயல்பாக அவரைப் பாதிப்பதாகவே இருந்திருக்கும். இவ்வாறு திரு. வேலாயுதம் அவர்களது வாழ்வியலில் ஏற்பட்ட இவ்வாறான சோகமான பக்கங்கள் பல இருந்துள்ளன. இவற்றில் எது அவரது இந்த விபரீதமான முடிவுக்கு முனைப்பான காரணமாக இருந்திருக்கலாமென்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

ஆனாலும் வாழ்க்கையில் ஒரு கட்டத்திற்குப் பின்பு இப்பூவுலகில் எல்லாம் அவனேதான் என்ற முடிவை நிதானமாகவும் திடமாகவும் எடுத்து இனிமேல் சந்நிதியானது சிந்தனையுடன் தான் எனது எஞ்சிய வாழ்க்கை என முடிவுசெய்திருந்தார்கள். இதனை அவரது மிக நெருங்கிய நண்பர் திரு. நடராசா அவர்களுக்கும் வெளிப்படுத்தியிருந்தார்கள். மேலும் உழைப்பின் தேட்டத்தை சந்நிதியானுக்காகவே தேடி அவனது திருப்பணிக்காகவே செலவு செய்ய வேண்டும் என்பதிலும் கவனமாக இருந்துள்ளார்கள். இறுதியில் தனது மறைவும் சந்நிதியானுடனேயே என்பதை நிதானமாக முடிவுசெய்து அதனை நிதானமாகவே நிறைவேற்றியுள்ளார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஒரு சந்நிதானம். அங்கே பலவகைப்பட்டவர்களும் ஒன்றுகூடுகின்றனர். இவ்வாறு ஒன்றுகூடுகின்ற ஒவ்வொருவரும் பெரும்பாலும் தமக்கு ஏற்படுகின்ற ஏதோ ஒரு சஞ்சலத்தைப் போக்குவதற்காகவே அங்கே ஒன்றுகூடுகின்றனர் என்பதை நாம் உணரமுடிகிறது. ஆம்' வேறு எங்குமே கிடைக்காத ஆறுதலை, ஆற்றுப்படுத்தலை அவனது சந்நிதானத்தில் தான் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அவர்கள் அங்கே அன்றாடம் தமது அனுபவத்தால் நன்கு உணர்ந்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

ஆனாலும் இவ்வாறு ஒன்றுகூடுகின்றவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறான சஞ்சலங்களுக்காக அங்கே ஒன்றுகூடுகின்றனர் என்பது அவர்களுக்கு மட்டுமே துலாம்பரமானது என்பதற்கு திரு. வேலாயுதம் அவர்களது வாழ்க்கை வரலாறும் ஒரு உதாரணமாக விளங்குவதை இங்கே அடியார்கள் நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

**ஆம் சஞ்சலம் தீர்பவன் சந்நிதி முருகன்**

**ஓம் முருகா!**

தமிழகத் திருக்கோயில் வரிசை:

உ

# சுசீந்திரம்

-வல்வையூர் அப்பாண்ணா-

கன்னியாகுமரியிலிருந்து நாகர் கோயில் செல்லும் பாதையில் 6கி.மீ தூரத்தில் பழையாற்றின் கரையில் சோலைகளும் - வயல்களும் சூழ அழகுடன் விளங்குகிறது "சுசீந்திரம்" திருக்கோயில். ஊரின் நடுவேயுள்ள கோயிலும், கோயிலின் தேரோடும் நான்கு பெரு வீதிகளும், அகன்ற தெப்பக் குளமும், அதன் நடுவே அமைந்துள்ள மண்டபமும் ஊருக்கு அழகு செய்கின்றன.

சுசீந்திரம் தென்னாட்டுச் சிற்பக் கலைக்குச் சிகரமாக விளங்குவது. அதனால் இக்கோயிலின் சிற்பக்கலையழகு பற்றிச் சற்று விரிவாகவே சொல்வோம். ஏழு நிலைக் கோபுரத்தின் உயரம் தொலைவிலேயே நம்மை வரவேற்கிறது. 134 அடி உயரமுள்ள இக்கோபுரத்தினில் சுதைச் சிற்பங்கள் பலதும் காணப்படுகின்றன. கோபுர வாசலில் அகன்ற விஸ்தாரமான "நாடகசாலை" எனப்படுகின்ற யாளிகளும் பெரும் தூண்களும் கொண்ட மண்டபம் காணப்படுகிறது. முகப்பில் தவக்கோலத்தில் கலைமகளும், திருமகளும், மலைமகளும் காட்சி தருகின்றனர்.

வாயிலைக் கடந்ததும் தென்படுவது "ஊஞ்சல் மண்டபம்". இதன் நடுவே பெரிய கல் மேடை. அதைச் சுற்றியுள்ள நான்கு பெரும் தூண்களிலும் மன்மதன், ரதி, கர்ணன், அர்ச்சுனன் ஆகியோரின் சிலைகள் உள்ளன. மன்மதன் கையில் ஏந்திய கரும்பு வில் (கல்லினாலானது) ஆச்சரியப் படவைக்கிறது. ரதியின் நெற்றித் திலகம், கண் இமைகளும் விழிகளும், எடுப்பான நாசி, நிமிர்ந்து திரண்ட மார்பகங்கள், அவற்றின் மேலாடையின் மடிப்புகள், கைகளில் உள்ள விரல்களும் நகங்களும், கையின் மேல் அமர்ந்துள்ள கிளி, நடனப்பெண்களை ஒத்த புடைவையின் கீழ்ப்பகுதி மடிப்புக்கள் அப்பப்பா....எதைச்சொல்ல.... எப்படிச் சொல்ல ரதி என்றால் ரதியேதான்! கம்பீரமான தோற்றத்துடன் கர்ணனும் அர்சுனனும். இவை யாவுமே உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றன.

கிழக்குப்பிரகாரத்தில் முதலில் தவநிலைத் தோற்றத்தில் உள்ள தட்சணாமூர்த்தி சந்நிதியை வணங்கிய பின் "வசந்த மண்டபத்தை" அடைகிறோம். சுற்றிலும் நீர் நிரப்பக்கூடிய இடைவெளியுடன் ஒற்றைக் கல் மேடை. வசந்தோற்சவ விழாவின் போது இம் மேடையில் சுசீந்திரப் பெருமான் உமையுடன் கொலு வீற்றிருப்பார். மண்டபத்தின் மேல் விதானத்தில் பன்னிரு ராசிகளும் நவக்கிரகங்களும் அமைந்திருப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பு அர்ச்சகர் பூசை வேளையில் இம் மேடையிலேயே பூக்களை அர்ச்சிக்கிறார். நேர்த்தியை நிறைவேற்றும் பக்தர்கள் கல் மேடையில் சிட்டிகளில் நெய்விளக்கேற்றுகிறார்கள். வசந்த மண்டபத்தின் பின்புறம் தேவியுடன் அமர்ந்திருக்கும் விநாயகரின் பெரிய உருவம் கண்டு வியப்பு நீங்கா நிலையில் தெற்குப் பிரகாரம் செல்கிறோம்.

பயத்தை வெளிக்காட்டுவது அபாயத்தை எதிர்கொண்டு அழைப்பதாகும்.

இராமேஸ்வரத்து தென் பிரகாரம் பிரபல்யமானது. அதற்கு அடுத்ததாக தென்இந்தியாவின் மிகப் பெரிய பிரகாரம் இதுவே. பிரகாரத்தின் இருமருங்கும் உள்ள தூண்களில் **உயர்ந்த யாளிகளும், விளக்கேந்திய பாவைகளும்** (4அடி உயரம்) செதுக்கப்பட்டுள்ளன. ஒரு நூலிடைப் பிசகுமின்றி ஒரே நேர் வரிசையில் யாளிகளும் பாவையரும் கனகச்சிதமாக உள்ளனர். இப் பிரகாரத்தில் பிச்சாடனராய் நிற்கும் கங்காளநாதர் கோயில் உள்ளது. இதை அடுத்து கைலாசநாதர் மேற்கு நோக்கி உள்ளார். வில்வ மரத்தடியிலுள்ள விநாயகரையும் நாக சிலைகளையும் வணங்கி மேற்கு பிரகாரத்தினுள் நுழைகிறோம்.

தென்மேற்கு மூலையில் ஐயப்பன் சந்நிதியும் வடமேற்கு மூலையில் ஸ்ரீராமர் சந்நிதியும் காணப்படுகிறது. ஸ்ரீராமரும் - சீதையும் அமர்ந்த கோலத்தில் உள்ளனர். சந்நிதிக்கு வெளியே இலக்குவன் ஒரு புறமும் அனுமன் ஒரு புறமும் காவல் புரிகின்றனர்.

வடக்கு பிரகாரத்தில் அழகு முருகனின் தனிக்கோயில் உள்ளது. கோயிலின் முன் மண்டப வாயிலை இரு குறவர்களும், இரு நடன மங்கையரும் அலங்கரிக்கின்றனர். குறவர்களும் - நடன மங்கையரும் வார்த்தைகளால் வடிக்கவொண்ணாத அழகுக் கோலங்களாகும். குமரனின் கொஞ்சும் எழில் கண்ட நிறைவோடு, அடுத்து "ஐயந்தீஸ்வரத்துக் கோயில்களைக்" காண்கிறோம். வனவாசத்தின் போது பாண்டவர்கள் வழிபட்டதால் இது "பஞ்சபாண்டவர் கோயில்" என்று அழைக்கப்படுவதாக ஸ்தல வரலாறு கூறுகிறது. இங்கு நாராயனேஸ்வரர், மகாதேவர், ராமேஸ்வரர், ஸ்ரீசக்கரம், துர்க்கை, கண்ணன் முதலானோருக்குத் தனித்தனியாக கோயில்கள் உண்டு. வடக்கு வாசலை அடுத்து காலபைரவர் சந்நிதி காணப்படுகிறது.

வடக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள "அலங்கார மண்டபத்தில்" நான்கு பெரும் **இசைத்தூண்களும்**, யாளிகளும், இரு மன்னர்களின் சிலைகளும் உள்ளன. இசைத்தூண்கள் ஒரே கல்லினாலானவை. அவற்றுள் இரண்டில் 25 சிறு தூண்களும், மற்ற இரண்டில் 33 சிறு தூண்களும் உள்ளன. இச் சிறு தூண்களுக்கிடையே எதிரெதிராக நின்று பார்க்கும் போது பகுதி பகுதியாக எதிரே நிற்பவரின் முகம் தெரிகிறது. (இவை போன்ற இசைத்தூண்களை மதுரை மீனாட்சியம்மை ஆலயத்திலும் வாசகர்கள் பார்த்திருப்பார்கள்) அவற்றை கையினாலோ அல்லது மரக்கட்டையினாலோ தட்டும் போது ஸப்தஸ்வரங்களை கேட்க முடிகிறது. இது வழிகாட்டியின் கூற்று. யான் பொய் உரைக்க விரும்பவில்லை. தூண்களில் தட்டும் போது மென்மையான-வித்தியாசமான- ஆனால் இனிமையான சத்தம் உண்டானது உண்மையிலும் உண்மை. இசைத்தூண்கள் சிற்பக் கலையின் சிகரமாகும். அலங்கார மண்டபம் அருகே "அறம் வளர்த்த நாயகியின்" கோயில் உண்டு.

வடக்குப் பிரகாரத்தின் மறு கோடியில் சீதாராமனை நோக்கிக் கைகூப்பிய நிலையில் உள்ள 18 அடி உயரம் கொண்ட அனுமனின் பேருருவம் நம்மை பிரமிக்க வைக்கிறது. இராமதூதனின் பிரமாண்டத்தை ரசித்தபின் "சித்திர சபை"க்கு செல்கிறோம். சித்திர வாசலில் இரு பெரும்

யானைகள் நம்மை வரவேற்க, உள்ளே வேணுகோபாலனும், கங்காளநாதரும் நிற்கின்றனர். விநாயகர், பாலமுருகன், ஆனந்த நடனம் புரியும் சக்தி, வியாக்கிர பாதர், பதஞ்சலி, அனுமன் ஆகியோரின் சிலைகளும் மண்டபத்தை மேலும் அலங் கரிக்கின்றன.

இப்போது நாம் கிழக்குப் பிரகாரத் துக்கு மீண்டும் வருகிறோம். 12.5 அடி உயரமான இறைவனின் ஊர்தியான ரிஷபத்தையும், கருடாழ்வாரையும் நடுவில் கொன்றையடியையும் காணலாம். கோயிலின் மிகப்புராதனமானது கொன்றை யடி. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட (இதனை எழுதியே வைத்துள்ளனர்) கொன்றை மரத்தடியில் தாணு, மால், அயன் மூவரை யும் லிங்க வடிவில் காணலாம். லிங்கங் கள் தங்கக் கவசம் இட்டிருப்பதால், அபி ஷேக காலத்தில் மட்டும் (கவசமில்லாமல்) தரிசிக்க முடியும். கற்புக்கரசியான அனுசூயா வின் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கு லிங்கவடிவில் இருப்பதாகக் கூறுகிறார்கள். (அத்ரி முனிவர்- அனுசூயாவின் தவமும், கற்பின் வலிமையால் மும்மூர்த்திகளைக் கைக் குழந்தைகளாக்கியதும், ஈற்றில் மும் மூர்த்திகளும் லிங்கவடிவில் இங்கே அமர்ந் திருக்கும் வரலாறும் மிக நீண்டது. இடப் பெறுமதி கருதி அவற்றினை யான் இங்கே குறிப்பிடவில்லை.

கொன்றையடிச் சந்நிதிக்கு அடுத் துள்ள கருட மண்டபம் 6.5 அடி உயரத்தில் கருடாழ்வார் விஸ்ணு கோயிலை நோக்கிக் கைகூப்பி நிற்கிறார். வழுவழுப்பான கல்லாலானது இச்சிலை. மண்டபத்தைச் சுற்றி திருமலை நாயக்கர் சிலையையும், வேறு - மூன்று சிலைகளையும் காண லாம். பீடம் ஒரு அடி நீக்கிப்பார்த்தால் மூன்று சிலைகளும் 5 அடி உயரம் கொண் டவை. சிலைகளை அகன்ற கம்பி வலைக் குள் பாதுகாக்கின்றனர். நமது "வழிகாட்டி" சிலையருகே போய் அதன் காதுத்துவாரம் வழியே கையிலிருந்த நீண்ட ஈக்கினை நுழைக்க அது அடுத்த காதுத்துவாரத்தி னூடாக வெளியே வருகிறது. அதே காதுத் துவாரம் வழியாக மீண்டும் சற்று சாய்வாக ஈக்கினைச் செலுத்த அது மூக்குத் துவாரத் தினூடாக வருகிறது. மாறி மாறி வித்தை காட்டுவது போல - மூன்று சிலைகளிலும் இந்த வினோதத்தைச் செய்து காட்டி நம்மை அசத்துகிறார் வழிகாட்டி. கொன்றை யடிக்கு எதிரேயிருப்பது கொடி மண்டபம்.

திருமால், சிவன் கோயில்களுக்கு எதிரே இரு கொடிமரங்கள் காணப்படுகின் றன. கொடிமரத்தை அடுத்து செண்பகரா மன் மண்டபம் வருகிறது. இதை ஒரு கலைக் கூடம் என்றே சொல்லலாம். இராமாயண மகாபாரதக் காட்சிகள் தூண்களில் சிலை களாகவும், சுவர்களில் சித்திரங்களாகவும் காட்சியளிக்கின்றன. ஒரு தூணில் வாலி- சுக்கிரீவன் யுத்தம் சித்தரிக்கப்பட்டிருக் கிறது. இன்னொரு தூணில் வில்லுடன் இராமர் நிற்கிறார். இராமர் உருவத்தின் அருகில் சென்று பார்த்தால் அதேதூண் பகுதியில் வாலியின் உருவம் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் வாலியின் உருவத் திலிருந்து பார்த்தால் இராமன் உருவம் சரியாகத் தெரியவில்லை. அருகில் நின்ற வழிகாட்டியை இது குறித்து வினாவினேன் அவர் சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்தது. "இராமன் மறைந்திருந்து வாலி மீது அம்பு எய்தான் என்பதை சிற்பி

தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப்பெரிய பலவீனம்

எவ்வளவு நுணுக்கமாகச் செதுக்கியிருக்கி றான்.... பாருங்கள்" என்றார் அவர். எப்படி?.... எப்படி இது சாத்தியம்?...இன்று வரை தலையைப் பிய்த்துக்கொள்கிறேன் ஆனால். புரிந்து கொள்ளவே முடியவில்லை.

இப்போது நாம் மூலஸ்தான சந்நிதிக்குச் செல்கிறோம். தீபங்கள் நிறைந்த அர்த்த மண்டபத்திலிருந்து வரும் பேரொளியில் கருவறையின் மூலவர் தாணுமாலயன் ஜெகஜோதியாகப் பிரகாசிக்கிறார். லிங்கம் தங்கக்கவசம் போர்த்தப்பட்டு, அழகிய அலங்காரத்துடன் கூடிய திருமேனி. இடதுபுறம் தெற்கு நோக்கியபடியுள்ள கோயிலில் காணப்படும் நடராஜா் வடிவத்தின் கம்பீரம் தில்லையை நினைவூட்டுகிறது.

தாணுமாலயனின் வலப்பக்கத்தில் உள்ள விஸ்ணு கோயிலைத் "தெக்கேடம்" என்கிறார்கள். 7.5 உயரமுள்ள திருமால் திருப்பதி வெங்கடாசலபதியை கண்முன்னே நிறுத்துகிறார். கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் கோயில் கொண்டுள்ள மூடுவிநாயகர், துர்க்கை, சங்கர நாராயணர், சண்டேசுவரர், சுசீந்தைப்பெருமாள் ஆகியோரை வணங்கிய பின் நிரம்பிய மனதுடன் வெளியே வருகிறோம்.

பி.கு : தமிழ் நாட்டுக்கு ஸ்தல யாத்திரை செல்லும் அன்பர்கள், சுற்றுலா மையமான கன்னியாகுமரிக்கு அருகே உள்ள சுசீந்திரம் சென்று தாணுமாலயனைத் தரிசிப்பதுடன், தென்னாட்டின் சிற்பக் கலையழகினைப் பார்த்து ரசித்து வரவேண்டும்.

---

எமது கோயிலின் தரிசன வேளைகளில் நாம் எங்குமே "வழிகாட்டியை" அமர்த்திக்கொள்ளவில்லை. ஆனால் இங்கு நிலைமை வேறாக இருந்தது. வழிகாட்டிகள் கூட்டாக (அல்லது சங்கமாக) இயங்குகிறார்கள். அவர்களது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தின் பேரில் (உள்ளூர் விருப்பமில்லாமலே) வழிகாட்டியை அமர்த்திக்கொண்டோம். பேரம்பேசி முடிந்ததும் கையில் இரண்டு நீண்ட ஈக்குகளுடன் கோபுர வாசலிலிருந்து நம்மை அழைத்துச் செல்கிறார். வழிகாட்டியின் அவசியம் பின்னர் பல இடங்களிலும் நமக்குப்புரிந்தது. இல்லையெனில், பல முக்கிய இடங்களில் நிறைவான விளக்கங்களைப் பெறத் தவறியிருப்போம். கடைசிவரை கையிலுள்ள ஈக்குகளை வீசிக்கொண்டு நடந்தாரே தவிர எங்குமே அதனைப் பயன்படுத்தவில்லை. இவரைப்போன்று இன்னும் பல வழிகாட்டிகளும் கையில் ஈக்குகளுடன் சுற்றித்திரிவதையும் நாம் அவதானித்தோம். இந்த மூன்று சிலையருகே வந்த போதுதான் இந்த ஈக்குகளைப் பாவிக்கின்றனர் அந்த வழிகாட்டிகள்.

குறிக்கோள் சிதறாத துடிப்பான கவனம்தான் வெற்றிக்கு சிறந்த வழிகாட்டுவதாகும்.

உ

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

07-08-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "உள்ளம் பெருங்கோயில்"

வழங்குபவர்:-செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் அவர்கள்

---

14-08-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

பாடசாலை மாணவர்கள் நிகழ்வு

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி

---

21-08-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "தேவிபாகவதம்" (தொடர்)

வழங்குபவர்:- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

28-08-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் 140ஆவது மாத வெளியீடு**

**ஆவணி - 2009**

வெளியீட்டுரை:- இரா. ஸ்ரீ நடராசா ஆசிரியர் அவர்கள்

மதிப்பீட்டுரை:- திரு. க. நடேசு (தெணியான்) அவர்கள்

---

20.08.2009 - 01.09.2009 வரையான ஆலய

உற்சவ காலத்தில் வழமையான

விசேட நிகழ்வுகளும் இடம்பெறும்.

பதிவு இல. Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம் 2009

